# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. V Issue 5 August 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 20 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 21 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 23 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 26 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 28 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 30 |
| பாதுகாப்பு . . . . . . . . . . . . . . . . | 32 |
| நிலையான சமர்ப்பணம் — நெடு நாளைய யோகம். . . . . . . . . . . | 37 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 40 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 44 |
| **அன்னை இலக்கியம்** | |
| இறைவனுடன் அரைமணி நேரம் . | 49 |

ஜீவியத்தின் ஓசை

ஜடம் ஜீவனின்

பேரானந்தம்

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

**ஸ்ரீ அரவிந்தம்**

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேகப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## XXVIII. Supermind, Mind and the Overmind Maya

Page 280
Para 9

We can regard the Powers of the Reality as so many Godheads.
If so, we can say that the Overmind releases a million Godheads.
It releases them into action.
Each is empowered to create its own world.

Each world is capable of relation and interplay with the others.
There are in the Veda different formulations of the nature of the Gods.
It is said they are all one Existence.

The sages give different names to them.
Yet each God is worshipped as if he by himself is that Existence.
He is worshipped as one who is all the other Gods together.

Or as if he contains them in his being.

And yet again each is a separate Deity.



## 28. சத்திய ஜீவியம், மனம், தெய்வீக மனத்தின் மாயை

இறை சக்திகளை நாம் பல தெய்வங்களாகக் கருதலாம்.
அப்படியானால், தெய்வீக மனம் ஒரு மில்லியன் தெய்வ சக்திகளை வெளியிடுகிறது என்று கூறலாம்.
அது அவைகளைச் செயலை மேற்கொள்ள வெளியிடுகிறது.
ஒவ்வொன்றும் தன் சொந்த உலகை உருவாக்கும் உரிமை பெற்றுள்ளது.
ஒவ்வொரு உலகமும் மற்றவைகளோடு தொடர்பும் இடைச் செயல்பாடும் எழுப்பும் திறன் கொண்டது.
வேதத்தில் கடவுள்களின் தன்மைகள் வெவ்வேறாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன.
அவை ஒரே சச்சிதானந்தத்தைச் சேர்ந்தவை என்று கூறப்பட்டன.
ரிஷிகள் அவற்றிற்கு வெவ்வேறு பெயர்களை அளித்தனர்.
இருந்தாலும், ஒவ்வொரு கடவுளும் அதுவே சச்சிதானந்தம் என்பதைப் போன்று வழிபடப்பட்டது.
அனைத்துக் கடவுள்களும் ஒன்று சேர்ந்த ஒன்றாக ஒரு கடவுள் வழிபடப்படுகிறது.
அல்லது ஒன்று பிறவற்றை அதனுள் கொண்டதாகக் கொள்ளப்படுகிறது.
இருந்தாலும் ஒவ்வொரு தெய்வமும் தனித்தனியானவை.

Sometimes one acts in unison with companion deities.

Sometimes separately, sometimes even in apparent opposition.
They may act in opposition to other Godheads of the same Existence.
In the Supermind all this would be held together.

It would be held as a harmonised play of the one Existence.

In the Overmind each of these three conditions could be a separate action.
Each could have its own principle of development.

Each could have its own consequences.
And yet each could keep the power to combine with the others.
They could combine in a more composite harmony.

As with the One Existence, so with its Consciousness and Force.
The One Consciousness is separated into many independent forms.
These forms of consciousness and knowledge follow out their own line of truth.
It is the line of truth they have to realise.
The one total and manysided Real-Idea is split up into its many sides.



சில நேரங்களில் ஒன்று பிற தெய்வங்களுடன் இணைந்து செயல்படுகிறது.
சில நேரங்களில் தனித்தும், சில நேரங்களில் வெளிப்படையாக எதிர்த்தும் செயல்படுகின்றது.
அவை ஒரே சச்சிதானந்தத்தைச் சேர்ந்த பிற தெய்வங்களுக்கு எதிராகச் செயல்படக் கூடியன.
சத்திய ஜீவியத்தில் இவை அனைத்தும் ஒன்றாக சேர்த்து வைக்கப்படுகின்றன.
அவை சச்சிதானந்தத்தின் ஒரு சுமுகமான லீலையாக ஒருங்கிணைக்கப்படுகின்றன.
தெய்வீக மனத்தில் இந்த மூன்று நிலைகளும் தனித்தனியான செயலுக்குரியவை.
ஒவ்வொன்றும் அதன் சொந்த முன்னேற்றத்திற்கான தத்துவத்தைக் கொள்ள முடியும்.
ஒவ்வொன்றும் அதனதன் விளைவுகளைப் பெற முடியும்.
இருந்தாலும் ஒவ்வொன்றும் பிறவற்றோடு இணையக் கூடிய சக்தியையும் பெற்றிருக்கும்.
அவை வெகுவாகத் தொகுக்கப்பட்ட சுமுகத்தில் இணைய முடியும்.
ஒன்றான சத்தைப் போல அதன் ஜீவியம் மற்றும் சக்தியிலும் இது ஏற்பட முடியும்.
ஒரு ஜீவியம் பலவாகப் பிரிந்து பல சுதந்திரமான ரூபங்களாகியது.
ஜீவியம் மற்றும் ஞானத்தின் இவ்வுருவங்கள் தம் சொந்த வழிக்கான சத்தியத்தைப் பின்பற்றும்.
இச்சத்தியத்தை அவை உணர வேண்டும்.
ஒரு முழுமையான மற்றும் பல பரிமாணங்கள் கொண்ட முழு எண்ணம் அதன் பல பகுதிகளாகப் பிரிகிறது.

Each becomes an independent Idea-Force.

Each has the power to realise itself.

The one Consciousness-Force is liberated into its million forces.
Each of these forces has the right to fulfil itself.

Or each has the right to assume, if needed, a hegemony.

Each may take up for its own utility the otherforces.

So too the Delight of Existence is loosed out into all manner of delights.
Each can carry in itself its independent fullness.
Each carries its sovereign extreme.

The One Existence-Consciousness-Bliss has the character of teeming infinite possibilities.
This character is given to it by the Overmind.
This can be developed into a multitude of worlds.
Or it can be thrown together into one world.
In that world the endlessly variable outcome of their play is the determinant of the creation.

It is the determinant  of its process, its course and its consequence.



ஒவ்வொன்றும் ஒரு சுதந்திரமான எண்ணத்தின் சக்திகளாகின்றன.
ஒவ்வொன்றும் தம்மைத் தாமே உணரும் சக்தி கொண்டுள்ளன.
ஒரு சித் சக்தி பல மில்லியன் சக்திகளாக விடுதலை பெறுகின்றது.
ஒவ்வொரு சக்தியும் தனித்தனியாகப் பூரணம் பெறும் உரிமை கொண்டது.
அல்லது ஒவ்வொன்றும், தேவைப்பட்டால், ஒரு மேலாதிக்கத்தைப் பெறும் உரிமை கொண்டது.
ஒவ்வொன்றும் தன் சொந்த உபயோகத்திற்குப் பிற சக்திகளைப் பயன்படுத்தலாம்.
இதேபோன்று ஆனந்தமும் தன்னை இழந்து பலவாகப் பிரிந்து பலதரப்பட்ட ஆனந்தமாகியது.
ஒவ்வொன்றிற்கும் அதன் தனிப்பட்ட முழுமை உண்டு.
ஒவ்வொன்றும் சர்வ சக்தி கொண்ட வல்லமையை அதிதீவிர அளவில் தாங்கி நிற்கின்றன.
ஒரு சத், சித், ஆனந்தம் அபரிமித அனந்தமான சாத்தியங்களை இயல்பாகப் பெற்றுள்ளது.
இந்தக் குணத்தை தெய்வீக மனம் அதற்குத் தந்துள்ளது.
இதை எண்ணற்ற உலகங்களாக உருவாக்கலாம்.
அல்லது இதை ஒரே உலகத்தில் சேர்த்தும் வைக்கலாம்.
அந்த உலகத்தின் சிருஷ்டியைச், சக்திகள் ஒன்றோடொன்று சேரும் லீலையால் எழும் முடிவற்ற, மாறும் தன்மையுள்ள பலன் நிர்ணயிக்கும்.
அதன் செய்முறை, போக்கு மற்றும் அதன் பலன் இவற்றை அதுவே தீர்மானிக்கும்.

Page 281
Para 10

The Consciousness-Force of the eternal Existence is the universal creatrix.

Therefore the nature of a given world will depend on it.

It will depend on the self-formulation of that Consciousness.

That formulation will express itself in that world.

Equally, for each individual being, that Consciousness has assumed a poise in him.

His seeing of himself or the world he lives in will depend on that poise.

Our human mental consciousness sees the world in sections.

The sections are cut by the reason and sense.

They are put together in a formation which is also sectional.

The house it builds is planned to accommodate one formulation of Truth.

But it excludes the rest or admits some only as guests in the house.

Overmind Consciousness is global in its cognition.

It can hold any number of seemingly fundamental differences together.

It can hold them in a reconciling vision.



சச்சிதானந்தத்தின் சித் சக்தி பிரபஞ்சத்தை உருவாக்கும் சக்தி.

அதனால் அதில் உருவான ஒரு உலகத்தின் இயல்பு அதைச் சார்ந்திருக்கும்.

அந்த ஜீவியத்தின் சுயமான உருவகத்தை அது பொறுத்திருக்கும்.

அந்த உருவகம் அவ்வுலகில் தன்னை வெளிப்படுத்தும்.

அதே அளவில், ஒவ்வொரு மனிதனிலும் அந்த ஜீவியம் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுள்ளது.

அவன் தன்னை அல்லது தான் வாழும் இவ்வுலகைக் காண்பது அந்த இடத்தைப் பொறுத்தது.

நம் மனித ஜீவியம் உலகைப் பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கிறது.

அப்பகுதிகள் பகுத்தறிவாலும் புலனுணர்வாலும் வெட்டி பிரிக்கப்படுகின்றன.

அவை அனைத்தும் ஒரு வடிவமாகச் சேர்க்கப்படுகின்றன, அதுவும் பகுதியே.

அது எழுப்பும் அமைப்பு சத்தியத்தின் ஒரு ரூபத்திற்கு மட்டும் இடம் கொடுக்கும் தத்துவத்தைக் கொண்டது.

அது மற்றவற்றை அவ்வமைப்பில் ஏற்பதில்லை அல்லது சிலவற்றை மட்டுமே விருந்தினராக ஏற்கிறது.

தெய்வீக மனத்தின் அறிவாற்றல் பிரபஞ்சமயமானது.

அதனால் எண்ணற்ற அளவு தோற்றத்தில் அடிப்படையில் வேறுபட்டுத் தோன்றுபவைகளைப் பற்ற முடியும்.

அது ஒன்றோடொன்று சமரசம் கொள்ளும் நோக்கில் அவைகளைப் பற்ற முடியும்.

Thus the mental reason sees Person and the Impersonal as opposites.
It conceives an impersonal Existence.

In that Existence person and personality are fictions of the Ignorance.
Or they are temporary constructions.
Or, on the contrary, it can see the Person as the primary reality.
And it sees the impersonal as a mental abstraction.

It sees the impersonal as only a means of manifestation.

To the Overmind intelligence these are separable Powers.
They are powers of the one Existence.
They can pursue their independent self-affirmation.

They can also unite together their different modes of action.
They can create different states of consciousness.
They can do this both in their independence and in their union .
They can do so in their being.
They can be all valid and capable of coexistence.

A purely impersonal existence and consciousness is true and possible.



இதனால் பகுத்தறிவு மனிதனையும் இறைவனையும் எதிரெதிராகப் பார்க்கிறது.
அது சச்சிதானந்தத்தைப் பொதுவான ஒன்றாகப் புரிந்து கொள்கிறது.
அந்த சச்சிதானந்தத்தில், மனிதனும் அவன் தனித்தன்மையும் அறியாமையின் கற்பனைகள்.
அல்லது அவை தாற்காலிகமான அமைப்புகள்.
அல்லது, மாறாக, அது மனிதனை ஆரம்பநிலை சத்தியமாகப் பார்க்க முடியும்.
மேலும் அது பொதுவானதை மனத்தின் ஒரு கருத்தாகப் பார்க்கிறது.
அது பொதுவானதை ஒரு வெளிப்பாட்டிற்கான கருவியாக மட்டுமே காணும்.
தெய்வீக மனத்தின் அறிவிற்கு இவை பிரிக்க முடியும் சக்திகள்.
இவை ஒன்றான சச்சிதானந்தத்தின் சக்திகள்.
அவை அவற்றின் சுயமான சத்தியத்தை சுதந்திரமாகப் பின்பற்ற முடியும்.
அவை பலதரப்பட்ட தம் செயல்முறைகளை ஒன்று சேர்க்கவும் முடியும்.
அவை பல்வேறு ஜீவிய நிலைகளை உருவாக்க முடியும்.
இதை பிரிந்த நிலையிலும் ஐக்கியத்திலும் அவை செய்ய முடியும்.
அவை தம் ஜீவனில் இதைச் செய்ய முடியும்.
அவை அனைத்தும் முறையானவை, பிறவற்றோடு சேர்ந்து இருக்கும் திறன் கொண்டவை.
தூய்மையான தனித்தன்மை அற்ற பொதுவான ஜீவன் மற்றும் ஜீவியம் உண்மையானது மற்றும் சாத்தியமானது.

But also an entirely personal consciousness and existence.

The Impersonal Divine is Nirguna Brahman.

The Personal Divine is Saguna Brahman.

They are here equal and coexistent aspects of the Eternal.
Impersonality can manifest with person.
The person is subordinated to it as a mode of expression.

But  equally Person can be the reality with impersonality as a mode of its nature.
Both aspects of manifestation face each other.

They do so in the infinite variety of conscious Existence.
There are irreconcilable differences that present to the mental reason.
The same are to the Overmind intelligence coexistent correlatives.
There are contraries to the mental reason.
The same to the Overmind are intelligence complementaries.
Our mind sees that all things are born from Matter.

All things exist by material energy, go back into it.



அது போல் முற்றிலும் தனித்த ஜீவியம் மற்றும் ஜீவனும் உண்மையானது மற்றும் சாத்தியமானது.
இறைவனின் தனித்தன்மை இழந்த பொதுவான நிலை நிர்க்குண பிரம்மம் எனப்படும்.
இறைவனின் தனித்தன்மை பெற்ற நிலை அனைத்து குணங்களையும் பெற்ற சகுணப் பிரம்மம் எனப்படும்.
இவை இங்கு இறைவனின் சமமான, சேர்ந்து வதியும் அம்சங்கள்.
மனிதனில் பொதுத்தன்மை வெளிப்பட முடியும்.
மனிதன் அப்பொதுத்தன்மைக்கு உட்பட்டு அதை வெளிப்படுத்தும் ஒரு கருவியாவான்.
பொதுத்தன்மையை இயல்பாகக் கொண்ட சத்தியத்தின் ரூபமாக மனிதன் மாற முடியும்.
இறை வெளிப்பாட்டின் இரு அம்சங்களும் ஒன்று மற்றதை நோக்கியுள்ளது.
அவை சத்தின் அனந்தமான வகைகளில் அதைச் செய்கிறது.
பகுத்தறிவுக்கு சமரசம் செய்ய இயலாத வேறுபாடுகளாக அவை உள்ளன.
தெய்வீக மனத்தின் அறிவுக்கு அவை உடனுறையும், தொடர்புள்ள ஒன்றாக உள்ளன.
பகுத்தறிவுக்கு அவை எதிரானவை.
அவை தெய்வீக மனத்திற்கு ஒன்று மற்றதை நிறைவு செய்யும் அறிவுத்திறன் கொண்ட காரணிகளாகும்.
ஜடத்திலிருந்து அனைத்தும் உருவானதாக நம் மனம் பார்க்கிறது.
ஜட சக்தியால் அனைத்தும் ஜீவிக்கின்றன, அதை மீண்டும் சென்றடைகின்றன என்று அது பார்க்கிறது.

It concludes that Matter is the eternal factor.

It sees Matter as the primary and ultimate reality, Brahman.

Or it sees all as born of Life-Force or Mind.

It sees all existing by Life or by Mind.

It sees all going back into the universal Life or Mind.

It concludes that this world is a creation of the cosmic Life-Force.
Or it is a creation of a cosmic Mind or Logos.

Or again it sees the world as born of, existing by and going back to the Real-Idea.
It goes back to the Real-Idea or Knowledge-Will of the Spirit.
Or it goes back to the Spirit itself.
And it concludes on an idealistic or spiritual view of the universe.
It can fix on any of these ways of seeing.

But to its normal separative vision each way excludes the others.
Overmind consciousness perceives that each view is true.



இதனால் ஜடம் என்பது சாசுவதமான காரணி என்று அது முடிவு செய்கிறது.
அது ஜடத்தை முதலும் முடிவானதுமான சத்தியமான பிரம்மமாகக் காண்கிறது.
அல்லது அனைத்தும் பிராண சக்தி அல்லது மனத்திலிருந்து உருவானதாகக் காண்கிறது.
அனைத்தும் வாழ்வு அல்லது மனத்தால் உலகில் இருப்பதாகப் பார்க்கிறது.
அனைத்தும் பிரபஞ்ச வாழ்வை அல்லது மனத்தை மீண்டும் சென்றடைவதாகக் காண்கிறது.
இவ்வுலகம் பிரபஞ்சத்தின் பிராண சக்தியால் உருவாக்கப்-பட்டுள்ளதாக முடிவு செய்கிறது.
அல்லது பிரபஞ்ச மனம் அல்லது அதன் சின்னங்களின் படைப்பாகக் காண்கிறது.
அல்லது மீண்டும், இவ்வுலகம் முழு எண்ணத்தால் உருவாகி, அதனால் வாழ்ந்து, திரும்ப அதை அடைவதாக எண்ணுகிறது.
அது முழு எண்ணம் அல்லது ஆன்மாவின் ஞான உறுதியை மீண்டும் அடைகிறது.
அல்லது அது ஆன்மாவுக்கே திரும்புகிறது.
மேலும் அது பிரபஞ்சத்தின் லட்சிய அல்லது ஆன்மிக நோக்கத்தை முடிவாகக் கருதுகிறது.
அது இவற்றில் எவ்விதமான பார்வையையும் முடிவாகக் கருத முடியும்.
ஆனால் அது ஒன்றை முடிவு செய்வது, அதன் இயல்பான பிரிந்த பார்வையால் மற்றவற்றை விலக்கும்.
தெய்வீக மனம் ஒவ்வொரு பார்வைக்கோணத்தையும் உண்மையாக அறியும்.

Each is true of the action of the principle it erects.

It can see that there is a material world-formula.
It can see a vital world-formula.
It can also see a mental world-formula and a spiritual world formula.
Each can predominate in a world of its own.
At the same time all can combine in one world as its constituent powers.
To the Overmind view there is a normal and easily realisable creation.
There is an apparent Inconscience.
It conceals in itself a supreme Conscious-Existence.

The creation is a self-formulation of Conscious Force.
Our world is based on it.
It holds all the powers of Being together in its inconscient secrecy.
It is a world of universal Matter.
It realizes in itself Life, Mind, Overmind, Supermind, Spirit.

Each of them in its turn takes up the others as means of its self-expression.
There is a spiritual vision of Matter.
In it, Matter proves to have been always a manifestation of the Spirit.
Overmind is a power of origination.



அது எழுப்பும் ஒவ்வொரு தத்துவத்தின் செயல்பாடும் உண்மை.
ஜட உலகின் சூத்திரம் இருப்பதை அது பார்க்க முடியும்.
பிராண உலக சூத்திரத்தை அது காண முடியும்.
மன உலகம் மற்றும் ஆன்மிக உலகத்தின் சூத்திரத்தையும் கூட அது பார்க்க முடியும்.
அதனதன் உலகத்தில் அவை ஆதிக்கம் செலுத்த முடியும்.
அதே நேரத்தில் அனைத்தும் ஒரு உலகத்தில் அதன் அம்சங்களின் சக்திகளாக இணைய முடியும்.
தெய்வீக மனத்தின் பார்வைக்கு சிருஷ்டி ஒரு சாதாரண மற்றும் எளிதாக உணரக்கூடியது.
அங்கு தோற்றமான ஜட இருள் உண்டு.
அது தன்னுள் ஒப்புயர்வற்ற சச்சிதானந்தத்தை மறைத்து வைத்துள்ளது.
சிருஷ்டி என்பது சித் சக்தியின் சுய உருவாக்கம்.
நம் உலகம் அதை அடிப்படையாகக் கொண்டது.
அது சத்தின் அனைத்து சக்திகளையும் ஒருங்கிணைத்து தன் இருளில் மறைவாக வைத்துள்ளது.
அது ஜடப் பிரபஞ்ச உலகம்.
அது தன்னுள் வாழ்வு, மனம், தெய்வீக மனம், சத்திய ஜீவியம், ஆன்மா இவற்றை உணர்கிறது.
ஒவ்வொன்றும் அதனதன் முறைகளில் மற்றவற்றைத் தன் சுய வெளிப்பாட்டின் கருவியாகப் பயன்படுத்துகிறது.
அங்கு ஜடம் ஆன்மாவாகக் காட்சியளிக்கும்.
அதில் ஜடம் எப்போதும் ஆன்மாவை வெளிப்படுத்துவதாக உள்ளதை உறுதிப்படுத்துகிறது.
தெய்வீக மனம் சக்தியின் பிறப்பிடம்.

In the process of its executive dynamis it is an organiser.

It organises many potentialities of Existence.
Each affirms its separate reality.
But all are capable of linking themselves together.

They link together in many different but simultaneous ways.

Overmind is a magician, a craftsman.
It is empowered to weave the multicoloured warp and woof of manifestation.
It weaves a single entity in a complex universe.

Contd...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

இறைவன் இரவும் பகலும் இடைவிடாது செயல்படுவது அற்புதம். மனிதன் அவற்றைப் பெரும்பாலும் அற்புதமாகவே அனுபவிக்கிறான். ஆனால், அவன் மனத்தில் இறைவன் செயல்படுவதில்லை. அருள் மனிதனை நாடி வரும் பொழுது, மனிதன் சுவையை விரும்பி நாடத் தவறுவதில்லை. இறைவனைப் பொறுத்தவரை மனிதன் நாடும் சுவையும் அருளின் அம்சமாகும். தான் விரும்பி நாடும் சுவையின் பலன் மனிதனுக்கு இனிக்கும். கசப்பதும் உண்டு. இறைவனுக்கு இனிப்பு விருப்பம். கசப்பை இறைவன் உயர்ந்த இனிப்பாக நாடுகிறான். மனிதன் இனிப்பாகக் கருதும் இனிப்பையே இறைவன் அவனுக்கு அருளாக விரும்பி வழங்குகிறான். அன்னை இறைவனின் இனிப்பான அருளை இதமாக, உயர்வாக, நம்மை அரவணைத்து, நம் மனம் ஏற்றுப் போற்றும் வகையில் அளித்தபடியிருக்கிறார். அதற்காக அவதாரம் எடுத்தவரே அன்னை.

**மனிதனுடைய சுயநலமான ஆசைகளைப் பூர்த்தி செய்வதைத் தம் பரநலமான இலட்சியமாகக் கொண்டவர் அன்னை.**



அது தன் செயலாற்றும் சக்தியின் மூலம் ஒழுங்கமைப்பு செய்கிறது.
சத்தின் பலதரப்பட்ட திறன்களை அது முறைப்படுத்துகிறது.
ஒவ்வொன்றும் தம் தனித்த சத்தியத்தை உறுதி செய்கின்றன.
ஆனால் அனைத்தும் தம்மை ஒன்றாக ஒருங்கிணைக்கும் திறன் கொண்டவை.
அவை வெவ்வேறான விதத்தில் ஆனால் ஒரே நேரத்தில் தம்மை ஒருங்கிணைக்கின்றன.
தெய்வீக மனம் ஒரு மாயக்காரன், கைவினைஞன்.
அது பல்வகை வண்ணங்களாலான இழைகளால் சிருஷ்டியை நெய்து உருவாக்கும் சக்தி படைத்தது.
ஒரு தனித்த ஜீவனை அது சிக்கலான பிரபஞ்சத்தில் நெசவு செய்கிறது.

தொடரும்...

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பகவானும் அன்னையும் தாம் ஏற்ற யோகத்தில் அகந்தையை வென்றனர். என்றாலும் உலகில் அகந்தையைத் தாம் ஏற்றதால் அதன் வேதனையை அனுபவித்தனர். ஆனால் மற்றவர்களுக்கு அவ்வாறில்லை. அன்னையிடம் வந்த பிறகு எல்லாச் செயல்களும் தாமாகக் கூடிவருகின்றன. மிகப் பெரியவை வாழ்வில் நிகழ்கின்றன என்பது அன்பர் அனுபவம். முயற்சியின்றி காரியங்கள் நடக்கும் பொழுது பொறுப்பும் நம்முடையது இல்லை எனத் தெரியும். அன்னையால் செயல்கள் நடக்கும்போது ஆனந்தம் முதலிலேயே வந்து விடுகிறது. செயல் நடைபெறும்போதும், மேலும் நடந்த பின்னரும், ஆனந்தமயமாக இருக்கும். உலகம் ஆனந்தத்தால் படைக்கப்–படுகிறது; செயல்கள் ஆனந்தத்தால் இயங்குகின்றன; முடிவாக ஆனந்தத்தை நாடுகின்றன என்கிறது உபநிஷதம். இது குறிப்பது சச்சிதானந்தப் பேரின்பம் (Bliss). ஸ்ரீ அரவிந்தர் சொல்வது பேரின்பத்தை விடவும் பெரியதான, சிருஷ்டியின் ஆனந்தமாகும் (Delight).

**மேல் உலகத்தின் பேரின்பத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்த, சச்சிதானந்தம் முயல்வதையே சிருஷ்டியின் ஆனந்தம் குறிக்கிறது.**

இம்மாதச் செய்தி

# ஞானத்தை ஸ்தாபனம் செயலாக்கும்.





**Page 175: There nothing satisfied, but all allured**
***எதுவும் திருப்திபெறாத, அனைத்தும் கவரும்***

✡ அனைத்தும் தோற்றம், எதுவும் பெறாத முழுமை

✡ உயிருள்ள செயலெனத் தோன்றும் உருவமான பிம்பம்

✡ வெளியிடும் அடையாளம் மூடி மறைக்கும் திரை

✡ மங்கிய கனவுகள் மனத்திற்கு உண்மையான உருவகம் பெற்று

✡ ஜனிக்க முயலும் ஆத்மாக்கள் அங்கு எழமுயன்று

✡ பொறியில் சிக்கிய ஆன்மா காலத்தினூடே வழியிழந்து

✡ வாழும் சத்தியத்தைக் காண இயலாத

✡ அனைத்தும் வெறும் நம்பிக்கை, மறைந்த சந்தர்ப்பத்தை வேட்டையாடித் தேடும்

✡ எதுவும் நிலையில்லை, எதுவும் பெறாத முழுமை

✡ அனைத்தும் நிலையற்றன, ஆச்சரியமான அரைகுறை சத்தியம்

✡ அஸ்திவாரமற்ற வாழ்வின் லோகமாகத் தோன்றின

✡ பரந்த வானம், பெரு ஆர்வமாக உதித்தது

✡ கருவில் உருவாகும் சக்தி, அதன் சிறகணைப்பின் யாத்திரை

✡ உதய நட்சத்திரத்தின் ஆட்சி முதலில் உதித்தது

✡ மங்கிய ஒளியின் அழகு அதன் ஈட்டி முன் நடுங்கியது

✡ பரந்த வாழ்வின் துடிப்பு பவித்திரமான வாக்கு

✡ ஐயமான ஆதித்தன் சிறிதுசிறிதாக எழுந்து உயர்ந்தது

✡ அதன் ஜோதியில் அவன் பிரம்மத்தை உலகமாக்கினாள்

✡ ஆன்மா ஆணித்தரமாக இருந்தது, தன் ஆழ்ந்த பிரம்மத்திற்காக நாடும்

✡ கண்முன் தள்ளப்பட்ட சிதறும் பகுதிகளைக் கண்டு பட்ட திருப்தி

✡ பகுதியின் வாழ்வு முழுமையின் சிறப்பைப் பாதித்து

✡ ஒன்று சேர்ந்து ஒருநாள் உண்மை உயர்ந்து எழும்

✡ முடிவாக ஏதோ ஒன்றைச் சாதித்ததாக நினைத்தனர்

✡ உருவாகும் மனஉறுதி வளர்ந்து பெரும் உருவம்

✡ வாழ்வின் சாத்திரம், சக்தியின் வளரும் கோடு

✡ செயலெழும் சிறப்பு, விழிப்பான உருவத்தின் வீறுகொண்ட இசை

✡ எண்ணத்திற்கு எட்டாத கருத்தை மனத்தின் சுமையாக ஏந்தி

✡ வாழ்வின் ஆனந்த சுருதியென ஆர்வமாகச் சேரும் பின்னணி இசை

✡ ஜீவனுள்ள ஜீவராசிகளின் மனமெனும் திரையில் எழுத்தாகப் பதிக்கும்

✡ மறைந்த ஆத்மாவின் மகத்துவமாகப் பீறிட்டெழும்

✡ வாழ்விலும் ஜடத்திலும் ஆனந்தமே பதிலாக

✡ அழியாத அழகின் அற்புதத் திருமுகம் பார்வையில் பட்டது

✡ க்ஷண சந்தோஷம் அதனால் நிலையான பேரின்பமாகி

✡ பிரம்ம இரகஸ்யத்தைப் பிதிர்ராஜ்யமாகப் பெற்ற பெரும் சொல்



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/22. தெளிவற்ற குணம் சுய உணர்வால் கோபமாகிறது

- எளிய மனிதன் கருதாத விஷயங்களில் தெளிவு, சுய உணர்வு ஆகியவை உண்டு.
- *தன் இயலாமையை உணர்ந்தவன் பிறர் மீது கோபப்படுவான்.*
- தெளிவு என்பது சிறந்த தமிழ்ச் சொல்.
- நிதானம் செயலில் தெளிவாகும், அறிவு விளக்கம் பெறுவது தெளிவு.
- *தெளிவானவர் சொல் இரத்தினச் சுருக்கமாகும்.*
- குணம் என்பது வழக்கிற்குரிய எளிய சொல். தத்துவத்தில் குணம் விசேஷமானது.
- சத்வ குணம், ரஜோ குணம், தமோ குணம், சகுணம், நிர்க்குணம் என்பவை தத்துவமான சொற்கள்.
- மனம் உடையவன் மனிதன். மனம் பெற்ற திறமையை புத்தி என்கிறோம்.
- மனம் என்ற சொல் நெஞ்சைக் குறிக்கும், அதனால் மனச்சாட்சி வருகிறது.
- எப்படி மனம் வந்து இப்படி நடப்பது என்பர்.
- உடலுக்குரியது செயல், மனத்திற்குரியது அறிவு, உணர்ச்சிக்குரியது குணம்.
- சிந்தனை, திறன் பெற்ற உருவம் அறிவு.
- கையால் செய்யும் காரியம் கூடி வருவது, தவறாமல் கூடி வருவது திறமை.
- *உணர்ச்சி, திறம் பெற்று உருவமடைவதைக் குணம் என்போம்.*
- சுபாவம் பெரும்பாலும் குண விசேஷம்.
- மனிதன் அனைவரையும் அறிவான், தன்னையறிய விரும்ப மாட்டான்.

- திறமை அதிகப்பட்டால் தன்னை அறிய முயன்று பெருமைப்படுவான்.
- திறமை இல்லாத விஷயம் வெளி வருமானால், அதைத் தொட மாட்டான்.
- தன் இயலாமையை அறியும் நேரம் கோபம் எழும்.
- *வேகமான உணர்ச்சி கோபம்.*
- ஆன்மிகத்திற்கு ஒத்துவராதவை காமம், குரோதம், லோபம், மோகம்.
- கோபம் எழுந்து உருவான நிலை கோபத்தால் பலன் பெற முயல்வது குரோதம்.
- முனிவர்கள் கோபப்பட்டால் சபிப்பார்கள் என்று உலகம் அறியும்.
- யோகி, தபஸ்வி, சாது, முனிவரில் அதிகமாகக் கோபத்திற்குரியவர் முனிவர்.
- சாது சாதுவானவர். அவருக்கும் கோபம் வரும்.
  அவருக்குக் கோபம் எழுந்தால் அது பெரியதாக இருக்கும் என்பதைச் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' குறிக்கும்.
- விஸ்வாமித்ர காயத்ரி சூரியனை வணங்கும் மந்திரம்.
- ஆயுட்கால தபோ வலிமை *மந்திரமாகும்.*
- காயத்ரியை மனம் ஏற்றால் நெஞ்சில் சூரியன் உதயமாகும்.
- மந்திரத்தை உச்சரிக்கும்பொழுது சூரியன் எழும்.
- மந்திரம் தொடரும் வரை சூரிய தரிசனம் உண்டு.
- மந்திரம் நின்று விட்டால் சூரியன் அகக்கண்ணுக்குத் தெரியாது. உள்ளே சென்று விடும்.
  *ஆத்ம ஜோதி* அனைத்து ஜீவனிலும் பரவும். மேனி மினுமினுப்பாகும். முகம் தேஜஸ் பெறும், பரவும் ஜோதி வலது பக்கம் அதிகமாகும். வலது கைக்கு அந்த சக்தியுண்டு.



  வலது கையில் அக்னியிருப்பதால் மந்திரம் பலித்து சூரிய தரிசனம் பெறுபவர் வலது கையைத் தொங்க விடுவதில்லை. வலது கரம் கீழ் நோக்கினால் அங்குள்ள மந்திர சக்தி பூமியை நோக்கிப் போய் விரயமாகும்.
- மந்திரம் ஜோதியாவதால், அதற்கெதிரான இருள் ஜோதி வளரும் பொழுது தானும் வளரும். அதனால் தவம், யோகம் செய்பவருக்கு அதிகக் *கோபம் வரும்.*
- கோபம் இயலாமை.
- குணம் தெளிவில்லாமலிருப்பதை மனிதன் அறிவதில்லை.
- நேரம் வந்து தன்னையறிந்தால் சுயவுணர்வு குணத்தை அறியும்.
- குணம் குறையானது என்பதை அறியும் நேரம் கோபம் வரும்.
- பூரண யோகத்தில் சமர்ப்பணம் முதற்படி.
- சமர்ப்பணம் செய்தால் கோபம் எழாது.
- சமர்ப்பணம் தவறினால் கோபம் எழும்.
- *கோபம் ஆழ்மன [பாதாள] உணர்வு, மனிதனால் கோபத்தை அடக்க முடியாது.*
- *அடக்கினாலும் அழிக்கவோ, மாற்றவோ, திருவுருமாற்றவோ முடியாது.*
  பாதாளத்தின் கோபத்தை பரமாத்மாவின் **(Superconscient)** ஜோதி திருவுருமாற்றும்.
- சமர்ப்பணத்தால் கோபம் திருவுருமாறும். எழும் கோபம் பரமாத்ம ஜோதியால் அழிக்கப்பட்டு, திருவுருமாற்றப்பட்டு தன் வலிமையை இழக்கும்.

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 115. எல்லாப் பிரச்சனைகளும் இருக்கும்பொழுது எந்தப் பிரச்சனையுமில்லாதது போலிருப்பவருக்குப் பூரண யோக வாயில் திறந்திருக்கும்.

- அதிர்ஷ்டமான வாழ்வில் வாய்ப்புகள் மட்டுமிருக்கும்.
- பணம், உடல் நலம், பிரியம், செல்வாக்கு, படிப்பு, பண்பு சேர்ந்திருப்பது கடினம். *அப்படியிருந்தால் அவருக்கு வாழ்வில் நிறைவுண்டு.*
- மரணப்படுக்கையில் கவலையிராது. அது மனிதனுக்கில்லை.
- அன்பர்க்கு என்றும் உண்டு, ஏராளமாகவும் உண்டு.
  மரணப்படுக்கையை அவரே நிர்ணயிக்கலாம்.
  *அது ஒரு வகை இச்சா மிருத்யு* - மரணம் இச்சைக்குட்பட்டது.
- அன்னை வாழ்வு இன்று மக்கள் அறியாதது.
- மனிதன் என்றால் கவலையிருக்கும் என்பது வழக்கு.
- மனிதன் ஆனந்தத்திற்கு உரிமையுள்ளவன் என்பது அன்னை தருவது.
- அப்படி அனைவரும் ஆகலாம்.
- அப்படிப்பட்டவருக்குப் பூரண யோகம் பலிக்கும்.
- குறை, கவலை, பிரச்சனை, இயலாமை என எவையிருந்தாலும் அன்னையை ஏற்றபின் அவை படிப்படியாகக் கரைந்து மறையும்.
- ஏற்றவர் அதிகபட்சமாக அன்னையை ஏற்றால் விரைவில் மறையும்.
- *ஒருவர் அன்னையை ஏற்றால் பலருக்கு இந்த வசதியுண்டு.*



- அன்பர்கள் இந்த உண்மையைப் பெரும்பாலும் அறிவார்கள்.
- ஆனாலும் வேறு சில கேள்விகள் எழும்.
- கேள்வி எதுவானாலும் அன்பர் பழைய வாழ்வை நாடுவதால் மட்டும் எழுபவை அவை.
- பழைய மனநிலை, பழைய உறவு, பழைய பழக்கம் அவற்றிற்கு அஸ்திவாரம்.
- அவற்றை விட்டுவிட முடிவு செய்தால் கடைசிவரை பலிக்கும்.
- *முடிவான கட்டத்தில் முரண்டு செய்யும், முடிச்சு அவிழாது.*
- முடிச்சு அவிழ அன்பர் மனம் சம்மதிக்காது.
- சம்மதித்தால் அவிழும், வாழ்வு வேள்வியாகும்.
- மனம் மட்டுமல்ல, ஜீவன் துள்ளியெழும்.
- கவலைகள் மறந்து போகும்.
- மறந்ததால், மறைந்து போகும்.
- இது அன்னையை ஏற்றதற்கு அடையாளம்.
- பணம், பதவி, ஞானம், பண்பு, நாணயம், செல்வாக்கு ஆகியவற்றுள் ஒன்றே இந்நிலையைப் பெரும்பாலும் தரும்.
- அனைத்தும் தருவதை அன்னை அதிகமாகத் தருவார்.
- மீண்டும் பழைய நிலையை நாடுபவர் நம் கணக்கிலில்லை.
- நாடாமலிருக்க மனம் ஓயாது.
- நாடாதவர் நாட்டிற்கு எடுத்துக்காட்டு.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ரூபம் ஆத்மாவை வெளிப்படுத்துவது பரிணாமம்.

அஜெண்டா

**உயிர் பிரியும் நேரத்தில் அன்னை காப்பாற்றினார்.**
**அது ஆன்மிக திருஷ்டி.**

Volume 8, page 60

- இறக்கும் தருவாயில் அன்னை பாதம் நெஞ்சில் பட்டு நெடுநாள் வாழ்ந்தவர் ஒருவர்.
- ஆசிரமம் வந்த முதிய பெண் 'எனக்கு நிம்மதியான சாவு வேண்டும்' எனக் கேட்டு ஒரு மாதத்திற்குள் Television பார்த்துக் கொண்டே உயிரை விட்டார்.
- *அன்னையை ஜீவன் நினைவு கூர்ந்தால், உயிர் பிரியாது.*
- 25 வயதில் ஆயுள் முடிபவரை அன்னை 75 வயதுவரை உயிரோடு வைத்திருந்தார்.
- 21 வயதில் ஆயுள் முடிவதால் ஆசிரமத்தில் சேர்ந்தவர் மேலும் 50 ஆண்டுகளிருந்தார்.
- சிறு வயதில் 'இன்று உயிர் போகும்' என்று தினமும் தோன்றியதால் திருமணம் செய்யாமல் இராணுவத்தில் சேர்ந்தவர் தினமும் ஒரு கோயிலுக்குப் போய் வேண்டுவார்.
- உயிர் போகவில்லை - உயிரை எடுப்பதாக வாழ்வு அமைந்தது.
- இராணுவச் சுற்றுலா பாண்டி வந்தபொழுது சமாதிக்கு அந்த இளைஞர் வந்தார்.
- இனி உயிர் போகாதது போல் தோன்றியது. ஆனால் பயம் போகவில்லை.
- இராணுவ வேலையை ராஜினாமா செய்து நெய்வேலியில் சேர்ந்து திருமணம் செய்து மாதந்தோறும் சமாதிக்கு வருவார்.
- பயம் வேரற்றுப் போனாலும், இருக்கிறது.
- நெய்வேலியில் பகவான் பேரில் பள்ளி அமைத்தார்.
- *தெம்பு நம்பிக்கையாயிற்று.*



- 58 வயதில் ஓய்வு பெற்றார்.
- பாண்டி சூழல், போகும் உயிரைக் காக்கும்.
- சமாதி, போகும் உயிரைப் போக விடாது.
- இவை சூழலின் சக்தி.
- மூன்று நாள் பிரார்த்தனையை ஒருவர் மேற்கொண்டால் அருகில் உள்ளவர் உயிர் பிரியும் தருணத்தில் பிழைத்த செய்தி வரும்.
- '12 வயதில் ஆயுள் முடிந்தவர்' பிற்காலத்தில் ஏற்படப் போகும் ஆசிரமத் தொடர்பால் 72 வயதைத் தாண்டினார்.
- அன்பர்களுடைய உறவினர்கள், நண்பர்கள் ஜாதகம் சொல்லிய காலத்தைக் கடந்து வாழ்வது எவரும் அறியாதது.
- அன்னையை அறிந்தபின் ஆயுள் வளராதவரில்லை.
- போட்டி பொறாமைக்கு உட்பட்டு மனம் வெதும்பியவர் அன்னையின் அரவணைப்பை விட்டு விலக முடிவு செய்த நேரம் அன்னை தோன்றி 'போகாதே' என்றார்.
- அவர் 94 வயது வாழ்ந்தார்.
- பட்டுப் போன மாமரம் அன்னையைக் கேட்டு நெடுநாள் வாழ்ந்தது.
- Life என்ற பத்திரிக்கை ஆசிரியர் தம் உயிரைக் காப்பாற்றிய-பொழுது செயல்பட்டது சத்திய ஜீவிய சக்தி.
- Morris Good Man உயிர் பிழைத்தது உலகம் வியக்கும் செய்தி.

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பிறப்பிலாரம்பித்து மரணத்தில் முடியும் மனித வாழ்வைப் பிறப்புக்கு முன்னும், மரணத்திற்குப் பின்னுமாக பிரபஞ்சம் முழுவதும் விரிவுபடுத்துவது திருவுருமாற்றம்.

# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

9. நம்முடைய தனித்தன்மையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்முடைய முடிவுகளில் உண்மையிருப்பதாகத் தெரிந்தால், நாம் போகிற பாதை சரியெனத் தெரிந்தால், நம் முடிவில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். சமூகம் நம் முடிவை ஆதரிக்கவில்லை என்பதால் சமூகத்துடன் ஒத்துப் போவது நல்லது என்று நாம் பின்வாங்கக் கூடாது. சமூகத்திற்கு அடிபணியும் அளவிற்கு வாழ்க்கை நம்மைக் கட்டுப்படுத்தும். நாம் தனித்தன்மையைக் கருதும் அளவிற்கு வாழ்க்கை நமக்குக் கட்டுப்படும்.

தனித்தன்மையுடையவன் மனிதன். பயம் என்றுள்ளவரை ஒருவன் தன்னை மனிதனாகக் கருத முடியாது என அன்னை கூறுகிறார். தான் சம்பாதித்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாதவன் வாழத் தகுதியற்றவன். நமக்கு வேண்டியவர் யார் என நிர்ணயிக்க முடியாத மனிதன் நட்புக்கு இலாயக்கில்லாதவன். நாட்டில் ஒரு புது விஷயம் நடந்தவுடன் அதைப்பற்றி சொந்தமாக அபிப்பிராயம் கொள்ள முடியாதவன் சிந்தனையில்லாதவன். எளியனைக் கொடுமை செய்வதைக் கண்டு சும்மாயிருப்பவன் மனித ஜென்மமில்லை. நன்றியுணர்வில்லாதவன் நல்ல மனிதனில்லை.

அப்படியானால் ஊரில் மனிதர்களேயில்லையா? தனித்தன்மை என்றால் என்ன?

இன்றைய சமூகம் 200 ஆண்டுகட்கு முன்பிருந்ததைவிட நாகரிகமான சமூகம். அந்த நாகரிகம் பெறாதவன் இந்தச் சமூகத்தைச் சேராதவன். படிக்காதவன், சாப்பாட்டிற்கில்லாதவன், ஓட்டுரிமை பெறாதவன் சமூகத்தைச் சாராத மனிதன்.

**Mr.** பென்னட் லிடியாவுக்கான செலவைத் திருப்பித்தர முடிவு செய்தவர். அது பெரிய பண்பு, **honour**. எளிதில் காண முடியாதது. நாம் நம் காரியம் ஆக சிபாரிசு தேடுகிறோம், இலஞ்சம் தருகிறோம். அதாவது உலகம் ஏற்ற இக்குணங்களை நாமும் ஏற்றால் நாம் உலகத்தின் தாழ்ந்த பகுதிக்குரியவராவோம்.



எல்லோரைப் போலவும் உள்ளவன் எந்த உயர்ந்த காரியத்தையும் உலகுக்கோ தனக்கோ சாதிக்க மாட்டான். தமிழன் என ஓர் இனமுண்டு, தனியே அவனுக்கொரு குணமுண்டு. அது தனித்தன்மை **Individuality.** உலகம் இதுவரை முன்னேறியது - **pioneers, leaders, revolutionaries, thinkers, rebels** - முன்னோடிகள், தலைவர்கள், புரட்சிக்காரர்கள், சிந்தனையாளர்கள், எதிர்ப்பவர்களால். இவரனைவரும் **individuality**-யின் ஓர் அம்சம் பெற்றவர்கள். சங்கீதம் பயிலுபவன் குரு சொல்லிக் கொடுத்ததைப் பாடுகிறான். அவனுக்கே சங்கீத ஞானம் வளர்ந்தவுடன் தானே தனக்குரிய பாணியில் இராகத்தை ஆலாபனை செய்வது **individuality. Individuality** இல்லாத இடமில்லை. வெளிப்படையாகத் தெரிவது குறைவு.

அமெரிக்கா பணக்கார நாடு. ராணுவ பலம் மிகுந்தது. அரசியல் தலைமையுடையது. அதனால் உலகம் முழுவதும் அமெரிக்காவின் பாணியைப் பின்பற்றுகின்றது என நாம் நினைப்பது உண்மை. அது சிறிய உண்மை. அதற்குரிய பெரிய உண்மையொன்றுண்டு. அங்கு எந்தச் சட்டத்தையும் ஆர்டராக மாற்றி ஊழியரை அமுல்படுத்தச் சொல்ல முடியாது. ஊழியர், சொல்லியதைச் செய்வதற்காக இருப்பவர் எனினும் அவர்கள் புரிந்து ஏற்றுக் கொள்ளும் அளவில் ஆர்டரில்லாவிட்டால் அந்த ஆர்டர் அவனுக்கு வாராது. சிறு குழந்தைகளும் 5 வயதில் நீல சட்டையைப் போட்டுக் கொள் எனில் 'எனக்குச் சொல்லாதீர்கள். எது போட்டுக் கொள்ள வேண்டும் என எனக்குத் தெரியும்' என்று பதில் வரும். கணவன், மனைவி வெளியில் போகப் புறப்பட்டால் 'எங்கு போகிறாய்' எனக் கேட்க முடியாது. அவளாகச் சொன்னால் உண்டு. சொல்லாவிட்டால் எப்படிக் கேட்கலாம் எனக் கோபம் வரும்.

- மனிதனை மனிதனாக சொந்த அறிவுள்ள மனிதனாக நடத்தும் நாடு அது.
- மனிதனுக்கு **individuality** தனித்தன்மையுள்ள தேசம் அது.
- அத்தனித்தன்மை அமெரிக்காவுக்கு உலகத் தலைமையைப் பெற்றுத் தந்தது.

(தொடரும்)

# பாதுகாப்பு

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
சொற்பொழிவு ஆற்றியவர்: திருமதி உஷா ராமதாஸ்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: மார்ச் 15, 2015

இறைவன் எங்குமிருக்கிறார், *இதயத்திலிருக்கிறார்*, ஆனால் நம்மால் அவரைக் காண முடியவில்லை. ஒருவர் பெற்ற ஆன்மிக அனுபவத்தால் அவரை ஏற்று, *இறைவனை நாம் வழிபடுகிறோம்*. பாதுகாப்பு அபரிமிதமாகவுள்ளது. ஆனால் நாம் அதைக் கேட்டுப் பெற வேண்டியிருக்கிறது, கேட்கவும் நினைவு வருவதில்லை. *நம் பொய் தவறு, பிறர் பொய்யை ஏற்பது பெரும் தவறு. பெற்றோர் பொய் உடலில் ஊறியது. அதிலிருந்து நாம் பிரிவது அவசியம் என்றே புரியாது*. ‘‘அவர் என் தலைவர். அவர் எழுந்தால் நான் எழுவேன். அவர் உட்கார்ந்தால் நான் உட்காருவேன்’’ என்பவர் தலைவருடன் (**vital**) உணர்வில் ஒன்றானவர். நாம் நம் பெற்றோர் கொடுத்த உடலில் வாழ்வதால், நம்மைப் பெற்றோரிடமிருந்து பிரித்துப் பார்ப்பது கஷ்டம். *அன்னையைக் கேட்டால் அதுவும் கிடைக்கும். அது நிரந்தரமான பாதுகாப்பு*. நாம் வழிபாட்டைப் பின்பற்றுகிறோம். ஆன்மிகத்தை ஏற்கவில்லை. துன்பமான வாழ்விலிருந்து இன்பமான வாழ்வைப் பெறுவதை மோட்சம் என நினைக்கிறோம். வாழ்வு பிறவிச்சூழல். பிறவி பூர்வஜென்ம பாவம். வாழ்வு தொல்லையும், விரக்தியுமானது. அதைவிட்டு நாம் அடையும் சுவர்க்கத்தில் தொந்தரவுகள் இருக்கா. தேவைகள் தானே பூர்த்தியாகும். *பணக்காரனுடைய வாழ்வு பெரும்பாலும் அது போன்றது*. பகவானுடைய சொர்க்கம் என்பது வேறு. நாமறிந்த சொர்க்கம் (**finite**) சிறியது தருவது. பகவான் கூறும் சொர்க்கம் (**infinite**) பெரியது தருவது. வசதி அபரிமிதமான வீட்டில் எந்தப் பிரச்சனையுமின்றி வாழ்வது நாமறியும் சுவர்க்கம். பகவான் கூறுவது (**infinite**) அதன் வாய்ப்புகளை முடிவில்லாமல் தருவது. அவர் கூறுவதை நாம் சிந்திப்பதும் கஷ்டம். மனிதன் அறிந்த சொர்க்கத்தில் வாழ்வில் கேட்டுப் பெறுவதை கேட்காமல் பெறுகிறோம். உயர்ந்த சுவர்க்கத்தில்



நம் திறமைகள் அனைத்தும் உயர்ந்த நிலையில் பரிமளிக்கும். கற்பனையுள்ளவன் கதை எழுதுவான். அது உலகம் படைத்ததைக் கடந்ததாக இருக்கும். காவியம், செய்யுள், கலை, சிற்பம், சிலை இவற்றுள் ஒருவனுடைய படைப்புத்திறன் வெளிப்பட்டபடியிருக்கும். எலிசபெத் பெம்பர்லியால் பரவசப்பட்டாள். விக்காமில் பரவசப்பட்டாள். *விக்காம் தரும் பரவசம் பொய்யின் பரவசம்*. டார்சிக்கு தான் எலிசபெத்தைக் காதலிக்க அவள் அனுமதிக்க வேண்டும். தன் அன்பை ஏற்கும் மனைவியை அவன் அவளில் தேடினான். அவள் தன்னை காதலிக்க வேண்டும் எனவும் அவனுக்குத் தோன்றவில்லை. அவன் தேடியது இனிய திருமண வாழ்வு. காதல் எழ இருவரும் ஒருவரையொருவர் நாட வேண்டும். அதை அவன் எதிர்பார்க்கவில்லை. *அப்படி ஒரு உறவுண்டு என டார்சிக்குத் தெரியாது*. நாமறிந்த சொர்க்கம் டார்சி தேடிய எலிசபெத். பகவான் கூறும் சொர்க்கத்தை உலகில் எவரும் இதுவரை கருதவில்லை. அது **Romance** அமரகாதல், பெருங்காதல். அதன் முக்கிய அம்சம், ஒருவரையொருவர் அதிகாரம் செய்ய விரும்பும்வரை அதற்கு இடமில்லை. *மேலும் ஒருவர் அன்பைத் தான் மட்டும் பெற வேண்டும் என்ற சுயநல மனப்பான்மையால் பெற முடியாதது*. மனைவி தன் பெற்றோர் உறவினரிடம் பாசமாக இருப்பதை ஏற்க முடியாத மனிதர்கள் உண்டு. கணவன் தன் பெற்றோர், உடன் பிறந்தவரிடம் பாசமாக இருப்பது சுயநலமான பெண்ணுக்கு உறுத்தும். *காதலை உணர சுயநலம் பரநலமாக வேண்டும்*. பாதுகாப்பு நிரந்தரமாக, மனம் பரநலத்தால் பரவசப்பட வேண்டும். பொய் சொல்பவருக்குக் காதலில்லை. ஏன் பிரியமே அவர் மனதில் எழாது. பாசம் என்பது உடலின் பிரியம். அது **possessive.** பெற்றதை ஆக்கிரமிக்கும்.

நாம் உடலில் மனமாக வாழ்கிறோம். *அன்பனானவுடன் மனத்தைக் கடக்கும் திறன் நமக்கு வருகிறது*. அதில் இரு கட்டங்கள் உள. இரண்டாம் கட்டம் சத்திய ஜீவன். முதற்கட்டத்தை பகவான் (**gnostic being**) சத்திய ஜீவனாகக்கூடிய ஆன்மிக ஜீவன் என்கிறார். *மனத்தின் பிரிக்கும் இறுக்கமான தடைகளைக் கடந்த நிலையது*. இதற்கு பிரபஞ்ச அம்சமும்

அதைக் கடந்த பிரம்ம அம்சமும் உண்டு. ஹாலண்டில் திருமணத்திற்கு முன் பிறந்த குழந்தைகட்கு சட்டத்தின் எந்த உரிமையும் கிடையாது. *அப்படிப்பட்டவர் அன்பரானபொழுது அவருக்கு யோகத்தைவிட தான் சட்டபூர்வமான பிரஜையாக வேண்டும் என்பதே முக்கியமாக இருந்தது*. 25-ஆம் வயதில் அவருக்கு அன்னையின் சூழலை உணர்ச்சியால் அறிய முடியும். ஆனால் தனக்குச் சட்டபூர்வமான உரிமை வர முடியும் என நினைக்க முடியவில்லை. 35-ஆம் வயதில் நாட்டில் சட்டம் அவர் நம்ப முடியாதபடி மாறியது. அவருக்கு அது ஆன்மிகப் புனர்ஜென்மம். *அன்னை விஷயத்தில் அன்பனுக்குப் பூரண பாதுகாப்புண்டு என்று பலரால் நம்ப முடியவில்லை*. பூரண ஆரோக்கியம் பெறலாம் என்பதை நம்ப முடியாதவருண்டு. அளவுகடந்த பெரும் செல்வம் பெறலாம் என்றும் நினைக்க முடிவதில்லை. நாட்டில் எந்த விருதையும் பெறலாம். உலகில் எந்தப் பரிசையும் பெறலாம், எந்தப் பதவியும் அன்பனுக்குண்டு, எந்த அந்தஸ்தும் அவன் விரும்பினால் கிடைக்கும் என நம்ப முடிவதில்லை. எளிய வேலையிலிருந்தவர் திருமணம் செய்து கனடாவுக்குப் போகலாம் எனக் கனவும் கண்டிருக்கமாட்டார். மனை விலை ஏராளமாக உயர்ந்து பலன் வரும்பொழுது எல்லாருக்கும் உள்ளது எனக்கும் வருகிறது என நினைக்க மனம் முன் வருகிறது. ஓர் அன்பன் பெற்றதால் அனைவருக்கும் வந்தது என நினைக்க முடியவில்லை. இதய ஆப்பரேஷனுக்கு ஆஸ்பத்திரியில் நாள் குறித்த பின் ஒரு கிருஸ்த்துவர் ஏசுவுக்குப் பிரார்த்தனை செய்தார். இதயம் பூரண குணமாயிற்று. ஆப்பரேஷன் செய்யவில்லை. அவருடைய ஆப்த நண்பன் அன்பர். கிருஸ்த்துவர் பிரார்த்தனை செய்த அன்றிரவு அவர் உடல் முழுவதும் சில்லிட்டு விட்டது. *உடல் சில்லிடுவது சைத்திய புருஷன் வெளிவருவது*. மேல் மனத்தினின்று உள்மனம் வழி அடிமனம் செல்வது யோகம். மேல் மனம் ஜடமானது **(physical)** உள்மனம் சூட்சுமமானது. மனம் க்ஷணம் வழிவிட்டு சூட்சுமமாகி உள்மனம் சென்றால் பிரார்த்தனை பலித்து விடும். பிரார்த்தனை பலிப்பது ஒரு நேரம். அன்பனுக்கு எந்தப் பாதுகாப்பு தேவையென்றாலும் ஒரு நேரம் தவறாமல் பலிக்கும். சில விஷயங்களில் பாதுகாப்பு தேவையானால் ஆரஅமர



சமர்ப்பணம் செய்யலாம். சில விஷயங்களில் அதே சமர்ப்பணத்தை உடனே செய்ய வேண்டிய அவசியம் உண்டு. ஆரஅமர செய்ய வேண்டிய சமர்ப்பணம் - கடன், வழக்கு, திருமணப் பிரச்சனை போன்றவை, உடல் நலம் - முடியாது எனத் தோன்றும். *பொதுவாக நினைவு வாராது. நினைவே வாராதவர் ஏராளம்*. நினைவு வந்தவருக்குச் சமர்ப்பணம் செய்யத் தோன்றாது. தோன்றினால் அது பிரார்த்தனையாகும். சமர்ப்பணமாகாது. *நாம் கேட்பது பிரார்த்தனை. அன்னை கொடுப்பதை ஏற்பது சமர்ப்பணம்*. சமர்ப்பண மனப்பான்மையுடன் செய்யும் பிரார்த்தனை உடனே பலிக்கும். பிரார்த்தனை சொல்லாக, நினைவாக இருக்கும் வரை பலிக்கத் தாமதமாகும். சமர்ப்பணத்தை ஒன்றரை ஆண்டு முறையோடு செய்தவர் அதன்பின் நிறுத்தி விட்டார். **November** 18, 1973-இல் அன்னை உடல் முன் அவர் வந்தபொழுது அவர் மேனி பொன்னிறமாயிற்று, தேனாக இனித்தது. உடல் இருந்த மூன்று நாளும் அந்த அனுபவம் தொடர்ந்தது. எந்தப் பிரார்த்தனையும் பலிக்கும். எந்தச் சமர்ப்பணமும் பலிக்கும். அன்பன் மறந்த பின்னும் சமர்ப்பணம் மறக்காது. சமர்ப்பணத்திற்குத் தடையானவை உள்ளவரை மற்ற விஷயங்கள் தனக்கும் பிறர்க்கும் பலிக்கும். *எந்த விஷயத்தில் தடையிருக்கிறதோ அத்தடை விலகும்வரை அந்த விஷயம் பலிக்காது*. அமெரிக்கர் **thank you** என ஒரு நாளில் 200 அல்லது 300 தரம் தவறாமல் வாய் ஓயாமல் சொல்கிறார்கள். பிறரை மரியாதையுடன் நடத்துகிறார்கள். பிரியமாக நடக்க வேண்டி, பிறர் பிரியத்தை உணரும் வகையில் பிரியமாகப் பழகுகிறார்கள். இது அந்த நாட்டு **politeness,** மேலெழுந்தவாரியான பழக்கம். *அதில்* **sincerity** *துளியுமில்லை*. அவர்கள் - ஒரு விஷயத்திலாவது - உண்மையாக நடந்தால் அவரே அன்பரானால், அன்னை அவர் வாழ்வில் அளவுகடந்து பலிப்பார். மனப்பாடம் செய்பவனுக்கும் ஓரளவு புரியும். புத்திசாலிப்பிள்ளைகள் பழக்கத்தால் மனப்பாடம் செய்பவர் புரிந்து கொள்ள முயல்வது நல்லது. அதன் வழி வேறு. மனப்பாடம் முதல் மார்க் வாங்கும். ஆனால் பாடம் புரிய உதவாது. புரிந்து பெறும் பலனை அடைய மனப்பாடம் தடையாகும். புரிவது பாதுகாப்பு.

கேட்காமல் கிடைக்கும். புரியாமல் மனப்பாடம் செய்யும் நிலையில் அன்பர் வாழ்வுள்ளது. *சாப்பிட்ட பிறகு ஜீரணம் செய்வது உடலின் பங்கு*. சமர்ப்பணம் செய்த பின் பாதுகாப்பது அன்னையின் பங்கு. கோபக்காரர் ஒரு விஷயத்தில் தனக்கு கோபம் வரக்கூடாது என முன்கூட்டியே சமர்ப்பணம் செய்தால் அவர் செய்த சமர்ப்பணத்தின் பலன் பத்து அல்லது இருபது வருஷம் வரை தொடர்வதைக் காணலாம். பாதுகாப்பைக் கேட்டுப் பெறும் நிலையில் உள்ள அன்பன் கேட்டால் கிடைக்கும். தவறாது கிடைக்கும். *நினைவு இனிமையாக நிலைத்தால் கேட்கும் அவசியமிராது*.

(முற்றும்)

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பூரண யோகம் கர்மத்தை ஏற்கவில்லை. கடவுள் உலகைப் படைத்தார் என்பதை கடவுளே உலகமானார் என்றார் பகவான். ஆத்மாவை மனிதனின் சிறந்த பகுதியாக பூரண யோகம் நினைக்கவில்லை. பிரம்மம் சிருஷ்டியுள் வந்தவுடன் பெற்ற நிலை ஆத்மா என்பது. அவ்வாத்மா சிருஷ்டியுள் தன்னை மறைத்து பரிணாமத்தால் வளர்ந்து முடிவான கட்டத்தில் சத்திய ஜீவியமாகிறது. மோட்சம் பெறுவது ஒரு ஆத்மா. அது பெற்ற ஆனந்தம் ஒரு ஆத்மா பெற்ற ஆனந்தம். சத்திய ஜீவியம் ஆன்மிகப் பரிணாமத்தால் அனைத்து ஆத்மாக்களையும் தன்னுட்கொண்டு சிருஷ்டியில் உள்ள அனைத்து ஆனந்தமும் ஒவ்வொரு ஆத்மாவும் அனுபவிக்கும் நிலைக்கு வருகிறது.

**இது உலகிலுள்ள எல்லாச் செல்வமும் எல்லா ஞானமும் எல்லா இன்பமும் ஒவ்வொரு ஆத்மாவும் முழுமையாகப் பெறும் நிலை.**



## நிலையான சமர்ப்பணம் – நெடு நாளைய யோகம்

கர்மயோகி

நிலையான சமர்ப்பணம் ஏற்பட நிதானமான மனம் தேவை. பூரண யோகம் மனிதனுக்குரியதல்ல. இறைவன் செய்யும் யோகம். *மனிதன் பங்கு சரணாகதி*. மனிதனை உலகம் ‘நாம்’ என அறியும். *மனத்துள் உறையும் ஆத்மாவே மனிதன்*. அந்த ஜீவாத்மா பரிணாமத்தால் பரமாத்மாவாகி மனிதன் பெறும் ஞானம் அஞ்ஞானத்தால் சிதைக்கப்படாதது, தீமையால் தீண்டப்படாதது. தீமையைத் திறம்படும் நன்மையாகத் திருவுருமாற்றவல்லது. தத்துவமாக பகவான் எழுதிய நூல் *மொழியின் பவழமல்லி மணம் பெற்றது*. அறிவுக்கு எளிதில் எட்டாது. *சாவித்ரி,* The Life Divine *அனுபவமாக மாறிய காவியம்*. அனுபவம் முழுமையாக பரிணாம பக்குவம் வாய்ந்த சலனம். அதற்கு இடைவெளியில்லை. அன்னை அதைத் திருவுரு-மாற்றம் என்கிறார். அச்சலனம் வேகமானது. *வேகம் அளவைக் கடந்து நிலையான தோற்றம் பெறுவது*. அறிவைக் கடந்து, உணர்வின் கனத்தையும் கடந்து உடலுணர்வின் முழுமையைப் பகுதியாக உட்கொண்டு ஜீவனின் உள்ளுணர்வின் பூரணம் பெற்றது அன்னை கூறும் விளக்கம். இம்முயற்சியை அறிவின் சிகரத்தை எட்டியவர் மேற்கொண்டபொழுது எண்ணம் தழலாக உடலை தகித்தது எனக் கூறினார்.

மனிதன் தன்னை உயர்வாக மட்டும் கருதுவான். அனைவரும் அதை ஏற்க விரும்புவான். தனக்குத் தகுதிக்கு மேற்பட்ட திறமையும், திறமைக்கு மேற்பட்ட தகுதியிருப்ப-தாகவும் உலகம் ஏற்றுப் பரிசு தர வேண்டும் எனப் பல முறை தன்னிடமே கூறுவான். ஷேக்ஸ்பியர் நாடகத்தில் முன்னுரை-யாக ஒரு சிறு நிகழ்ச்சியுண்டு. ஒரு Duke பிரபு பரிவாரத்துடன் காட்டினுள் நுழைந்தபொழுது ஒருவன் குடிபோதையில் மயக்கமாகக் கிடந்தான். பிரபுவுக்கு ஓர் வேடிக்கையான எண்ணம் தோன்றியது. அவனை எழுப்பி அவனிடம் ‘‘நீங்கள்தான் பிரபு. மயக்கத்தின் பேரில் மதியிழந்து விட்டீர்கள்’’ எனக் கூறி அரண்மனைக்கு அழைத்து வந்து பட்டு மெத்தையில்

படுக்க வைத்து பலரும் அவனைப் பிரபுவாக நடத்தச் சொன்னார். முதலில் கொஞ்ச நேரம் திகைத்தான். அவன் பெயர் **Christopher Sly** கிறிஸ்டோபர் ஸ்லை. திகைத்தவன் தொடர்ந்து *பிரபுவாக அனைவரையும் அதிகாரம் செய்தான்.* இதுவே மனிதனுடைய அந்தரங்கமான உண்மை நிலை. கவி படம் பிடித்துக் காட்டுகிறான். நாம் நம்மை நல்லவனாகப் பேசுவது, நினைப்பது உண்மையல்ல. *மனிதன் தன் உண்மையையறியாமல் இறைவனுக்கு எப்படி உண்மையாக இருக்க முடியும்?* ஏன் ஒருவன் இந்த யோகத்தைச் செய்ய வேண்டும் என்பவருக்குரிய யோகம் இது இல்லை. இதை-*யறிந்து எதனாலும் தடுக்க முடியாது என்ற ஆர்வத்தால் உந்தப்படுபவர்கட்கே இது உரியது.* சமர்ப்பணம் அவர்கட்கே-யுரியது. அதை எப்படி நிலையானதாகச் செய்வது என்பதே இக்கட்டுரை.

சமர்ப்பணம் நிலையானால் யோகம் நெடுநாளைக்குரிய-தாகும் என்பது கருத்து. அதைச் செய்வது **The Life Divine**-இல் உள்ள அடிப்படைக் கருத்துகள். அவை ஜோதி, சுமுகம், சுதந்திரம், அனந்தம் போன்ற பல. நிலையானது எனில் எது? ஆட்டங்காணாதது நிலையானது. ஏற்றத்தாழ்வு இருந்தால் ஆட்டம் காணும். தாழ்வது ஓரளவைக் கடந்தால் நிலையை இழக்க வேண்டி வரும். ஏற்றத் தாழ்வில்லாமல் முன்னேற்ற-மில்லை. ஏற்றமும் இறக்கமும் இருக்கும்பொழுது இடைவெளி முன்னுக்கு வர உந்தும். *முன்னுக்கு வர உதவும் ஏற்றமும் தாழ்வும் அவசியம்.* அடிப்படையை இழக்கும் தாழ்வு ஆபத்து. சமர்ப்பணத்தில் ஆர்வத்தால் முன்னுக்கு வரலாம். தாழ்ந்த ஆசைகள் கீழ்நோக்கி இழுக்கும். ஆசையிழுப்பது அதன் பலத்தால். அது வெல்லாது. ஆசைக்கு மனிதன் இடம் கொடுத்தால் ஏற்றம் போய் தாழ்வு நிலையாகும். *ஆசைக்கு மனம் உட்படாத நிலை நிலையான சமர்ப்பணத்திற்குரியது.*

பிரம்மத்தின் அம்சங்கள் யோகத்தை உயர்த்தும். ஒரு குடும்பத்தில் சுதந்திரம், பிரியம், பண்பு, சற்று அதிகமானால் அந்த அளவு அக்குடும்பம் யோகத்தை நோக்கி முன்னேறும்.



நாகரிகம் வளர்கிறது. நாகரிகம் என்றால் உடலால் வாழும் மனிதன் உயர்ந்து மனத்தால் வாழ்வான். உடல் வாழ்வு முரடானது. மனவாழ்வு பண்பானது. பிணக்கு ஏற்பட்டால் உடல் எதிரியின் உடலைத் தாக்கும், அழிக்கும். மனத்தால் வாழ்பவர் பிணக்கை பேசித் தீர்ப்பார்கள். நாகரிக வளர்ச்சியை பல்வேறு வகைகளாக அறியலாம். உணவு சுவையிலும், உடையின் அழகிலும், பேச்சின் மென்மையிலும், வீட்டின் வசதியிலும், கல்வியின் முக்கியத்துவத்திலும், நாட்டாண்மை-யின் தர்மத்திலும், மக்கள் செல்வத்திலும் நாகரிகம் வெளிப்-படும். *வயதானவர், சிறுவர், பெண்கள், வசதி குறைந்தவர், படிப்பறிவில்லாதவரை சமூகம் நடத்துவதிலும் நாகரிகம் வெளிப்-படும்.* யோகம் தவத்தைக் கடந்தது. தவம், தழல், முயற்சிகளில் சிறந்தது. முயற்சியின் முழுமை ஆத்ம விடுதலை, மோட்சம். அது ஒரு ஆத்மாவுக்கு வரும். *யோகம் முயற்சியின் முழுமையைக் கடந்த சரணாகதிக்குரியது.* தவம் அகத்திற்குரியது. யோகம் அக சித்தி புறத்தில் பலிப்பது. அகம் ஒருவர்க்குரியது. புறம் பிரபஞ்சத்திற்குரியது. அசைவற்ற ஆதியும் அந்தமுமில்லாத ஒரு ஆத்மா (**Spirit**) தியானத்தால் அதன் சிறையான மனம், உடலிலிருந்து விடுபடுவது தவம். *ஆத்மா* (**Spirit**) *என்பது அனைவருடைய ஆத்மா* (**Soul**)*வும் சேர்ந்த தொகுப்பு என்பது ஸ்ரீ அரவிந்தம்.* இது அசையும், வளரும், பரிணாம வளர்ச்சி பெறும். அதன் பரிணாம வளர்ச்சி ஒருவர் பெறும் ஆனந்தத்தை உலகம் முழுவதும் பெறும் பேரானந்தமாக மாற்ற வல்லது.

(தொடரும்)

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அகந்தைக்கும் உலகுக்கும் உள்ள தொடர்பு ரிஷிகளைக் குழப்பியதால் பகவான் 'அகந்தையற்ற பார்வைக்குரிய அகிலலோக சமுத்திரம் ஜீவன், ஜீவியமுமாகும். இதன் சக்தி ஜீவனற்றதல்ல, முழு ஜீவனுடையது' என்கிறார்.

## அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

கடமையில் முழு ஆர்வம் காட்டும் முறை சந்தோஷத்தைக் கொடுக்கும். அது பூரணமானால் சந்தோஷம் தினமும் அதிகரித்தபடி இருக்கும் (ever increasing joy). புரளியை விட்டொழித்த மனத்தைப் பெற்றால் மனம் நிம்மதியாக இருக்கும். இது பூரணமடைந்தால் அருவிபோல் அமைதி உடலில் பாய்வது தெரியும்.

அன்னையை நோக்கி தினமும் ஓர் அடி எடுத்து வைத்தால் அது ஒரு பெரிய யோக சித்தி. இது பூரணமான நிலையில் நாம் வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்க்க முயலும்பொழுது யோக அனுபவங்கள் ஏற்படுவதைப் பார்க்கலாம். இம்முறையைக் கையாளுபவர் ஒருவர் ஒரு கமிட்டிக் கூட்டத்தில் சூடான விவாதத்திற்குப் பிரச்சனை வரும்பொழுது அப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு சொல்ல முயன்றால், அறையில் சாந்தம் பரவி அவருள் peace நிலைத்து பிரச்சனையை முழுவதுமாகக் கமிட்டி தீர்ப்பதைக் காணலாம். அன்னையின் சாந்தம் பெறுதல் யோகானுபவம்.

நன்றியறிதல் பூரணம் பெற்றால் உடல் புளகாங்கிதம் அடையும். செயல்களுக்குள்ள அர்த்தபூர்வமான தொடர்பு புரிந்து பூரணம் அடைந்தால் அரைகுறையாக உருவாகிக் கொண்டிருந்த பிரச்சனைகள் ஆரம்பத்திலேயே கரைந்துவிடும்.

சிந்தனைக்குரிய ஆராய்ச்சி முதிர்ந்த நிலையில் மனத்தைத் தேடி மௌனம் வரும்.

நமக்குத் தீர்க்க முடியாத பிரச்சனை ஒன்றில்லை என்பது பூரணம் பெற்றால், நம் மூலம் நம்மைத் தாண்டியுள்ள பிரச்சனைகள் தீரும்.



*அடையாளமான ஒரு சிறு இடம்* **(Symbolic Corner):**

30 முறைகளுக்கும் உரிய சிறப்பைக் குறிப்பிட்டேன். இத்தனை சிறப்பும் நிறையும் அளவில் நம் வாழ்வு அமைவது முழு யோக முயற்சி. அதனால் நாம் அதை ஏற்கனவே கருதவில்லை. நம் முழு வாழ்வில் எல்லாச் சிறப்புகளையும் பெற முடியவில்லை என்றாலும், எல்லாச் சிறப்புகளும் முழுவதும் நிறைந்த ஒரு பகுதியை நம் வாழ்வில் ஏற்படுத்த முடியும். உலகத்தை ஆசிரமம் குறிப்பிடுவதைப்போல் நம் முழு வாழ்வையும் நாம் எடுத்துக்கொள்ளும் ஒரு பகுதி குறிப்பிடுவதுபோல் அமைக்கலாம். **Mother's corner: We create a miniature of our life in one part of life or in our portion of the house within which life will be perfect.** அதையே உள்ளத் திருக்கோயில் என்றேன். அதை உள்ளத்திலும் ஏற்படுத்தலாம்; வீட்டின் ஒரு பகுதியிலும் அமைக்கலாம். வீட்டில் அமைத்தால் உள்ளத்தின் பவித்திரத்தால் அதைப் பாதுகாக்க வேண்டும். உள்ளத்தில் அமைத்தால், பவித்திரமான செயலால் அதைக் காப்பாற்ற வேண்டும்.

நம் வாழ்வில் கால் பகுதிக்குக் குறையாத பகுதி இந்த முறையின் கீழ் வர வேண்டும். ஒரு மிகச் சிறிய பகுதியை இம்முறையில் கொண்டுவந்தால் நாம் எதிர்பார்க்கும் பெரும்பலன் இருக்காது. ஒரு பகுதியை இந்த எல்லா 30 முறைகளால் சூழ்ந்து கொண்டால் கால் பகுதி பெறும் தனிச் சிறப்பால், நம் முழு வாழ்வும் முழுப் பொலிவு பெறும் என்பதே நாம் எதிர்பார்க்கும் பெரும்பலன். வீட்டில் ஒருவர் திறமையுடனும், பொறுப்புடனும், நுணுக்கச் சிறப்புடனும் சம்பாதித்தால், அவர் முழுக் குடும்பப் பொறுப்புள்ளவரானால், ஒருவர் வருமானத்தால் முழுக் குடும்பமும் முழுப் பலன் பெறுவதற்கொப்பாகும். வீடு, ஆபீஸ், அவற்றைத் தவிர்த்த நம் சொந்த வாழ்க்கை (personal life) ஆகிய ஒன்றை எடுத்து இந்தச் சோதனையைச் செய்யலாம். சொந்த வாழ்க்கை என்று ஒன்றில்லாதவர் அதை எடுத்துக்கொள்ள முடியாது. பெரும்பாலோர்க்குச் சொந்த வாழ்வு என்றிருக்கும்.

வீட்டை எடுத்துக்கொண்டவரை (**domestic life**) இந்த 30 முறைகளில் எவை வீட்டு வாழ்க்கையில் எதிர்ப்படுகிறதோ அவற்றைப் பூரணமாகப் பின்பற்றினால் அதன் மூலம் அவர் முயற்சியின்றி அவரது முழு வாழ்வும் இந்த முழுப் பலனைப் பெறும்.

வீட்டின் ஒரு பகுதியிலும் இந்தச் சோதனையைச் செய்யலாம் என்றேன். முதலில் சொல்லியதைச் செய்ய முடியாதவர்களே இதைச் செய்யலாம். மனத்தளவில் பின்பற்றுவது சிறப்பானது. அது முடியவில்லை என்று செயல் அளவில் செய்வது பெருஞ்சிறப்புக்கு உரியதாகாது. எனினும் அதையும் விளக்கிச் சொல்கிறேன். சில வகுப்புகளில் ஒரு சிறந்த மாணவனிருப்பான். பொதுவாக மந்தமான வகுப்பாக இருக்கும். முதல் மாணவன் 100 மார்க்கும், இரண்டாம் மாணவன் 43 மார்க்கும் வாங்கினாலும், அவனை இரண்டாம் மாணவன் என்றே நாம் சொல்லுவோம். இந்த முறை அது போன்றது.

வீட்டில் ஒரு பகுதி அல்லது ஓர் அறையை இதற்காக ஒதுக்கினால் நாம் முதலில் பூஜை அறையை நினைப்போம். அது தவறில்லை என்றாலும், வாழ்க்கைச் சிறப்பைப் பூர்த்தி செய்ய முனைவதால், மற்ற அறைகளில் ஒன்றை எடுத்துக்கொள்வோம். அப்படிப்பட்ட பரிசோதனையில் தணிவான பேச்சைப் பின்பற்றுவது என்றால் அந்த அறையில் தாழ்ந்த குரலில் பேசலாம். வாய்ப்பைச் சமர்ப்பணம் செய்யும் முறையை இந்த அறையோடு சம்பந்தப்படுத்த முடியாது. எனவே நம் 30 முறைகளில் இந்த அறைக்குப் பொருந்தும் அனைத்தையும் பின்பற்றினால் போதும் என்று நாம் முடிவு செய்ய வேண்டும்.

அதனுள் எரியும் பல்ப் **fuse** ஆனால் வேறு பல்ப் போட அரை நிமிஷம் தாமதிக்கக்கூடாது. வேறு பல்ப் கையில் வைத்திருக்க வேண்டும். நம் கண்ணில் பட்டவுடன் புது பல்ப் போட வேண்டும்.

அங்குள்ள கடிகாரத்திற்குச் சாவி கொடுக்காமல் ஒரு மணி நேரம்கூட நிற்கக்கூடாது. எந்த நாள் சாவி கொடுக்க வேண்டும்



என்று குறிப்பிட்டு, 5, 6 மணி முன்னதாக அடுத்த சாவியைக் கொடுக்க வேண்டும். புத்தகம் மேஜை மேலிருக்கிறது, காற்றில் அடிக்கடி திறந்து கொள்கிறது என்றால், அதன் மீது பேப்பர் வெயிட் வைக்க வேண்டும். அல்லது காற்று வாட்டம் பாதிக்கப்படாமல் புத்தகத்தை மாற்றி வைக்க வேண்டும். செயல்கள், எண்ணங்கள், உணர்ச்சிகள், கருத்துகள், அனைத்தும் நம் முறைகளின்படி 100-க்கு 100 இந்த அறையில் உள்ளவற்றைப் பொறுத்தவரை அன்னை முறைகளைப் பின்பற்றினால், இந்த அறையின் சூழலுக்கு ஒரு சக்தி (**power**) வந்துவிடும். கோயில் கர்ப்பக்கிரஹம் போல் அது அமையும். வீட்டு நடவடிக்கைகளையும், அங்குள்ள அனைவருடைய வாழ்க்கையையும் காப்பாற்றும் திறனுடையது அந்த அறை-யிலுள்ள அமைப்பு. இப்படிப்பட்ட தொடர்பு ஏற்பட்டபின், அதனுள் உள்ள அமைப்பைக் கலைக்காமல் நம்மவர் வாழ்வில் ஒரு குறை ஏற்படுத்த முடியாது. அப்படி ஒரு குறை ஏற்பட்டால், அது இந்த அறையுள் நிச்சயமாகத் தெரியும். இங்கு ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்தால் வெளியில் ஏற்பட்ட நஷ்டம் விலகும். **We can call this symbolic living.** அன்னையின் அடையாள வாழ்க்கை எனலாம்.

வீட்டில் உள்ள அறை, பொருள்களால் (**physical things**) நிறைந்தது. அதற்கு இந்தச் சக்தி உண்டு. மனத்தில் உள்ள ஒரு பகுதியை இந்தக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி, அதன் பிரதிநிதியாக வீட்டில் ஒரு பகுதியைக் கருதினால், அங்கு இம்முறைகளைப் பூரணமாகப் பின்பற்றினால் நம் முழு வாழ்வும் அன்னையின் முழுச் சிறப்புக்குரியதாகும்.

தொடரும்...

❀❀❀

**ஜீவிய மணி**

*உடனுள்ளவர் ஏற்பதே உன் வெற்றிக்கு அறிகுறி.*

## அன்பர் அனுபவம்

ஸ்ரீ அன்னையின் அருளாலும், தங்களது மேலான ஆசிர்வாதத்தாலும், நாங்கள் நலமாகவும், சந்தோஷமாகவும், மனநிறைவோடும் இருக்கிறோம்.

நான் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்பொழுது, எண்பதுகளின் முடிவில், 'சமர்ப்பணம் என்றால் என்ன? அதை எப்படிச் செய்வது?' என்பதை நீங்கள் 'ஒரு டிக்ஷனரி' வாங்கும் நிகழ்ச்சியின் மூலம் விளக்கி இருந்த ஒரு கட்டுரையைப் படித்தேன். தங்கள் வழிகாட்டுதலால், பக்தர்களாகிய நாங்கள் வாழ்வில் அதைப் பின்பற்றி பல நன்மைகளை அனுபவித்து வருகிறோம். சமர்ப்பணம் முழுமையாக இருந்தாலும், பல சமயங்களில் செய்ய இயலாவிட்டாலும், கருணைக் கடலாகிய ஸ்ரீ அன்னை, பக்தர்களாகிய எங்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

2004-இல் நான் சமர்ப்பணம் செய்ய முயற்சித்த ஒரு பிரார்த்தனைக்கு ஸ்ரீ அன்னையின் அருளை முழுக்க வெளிப்படுத்தும் விதமாக நடந்த நிகழ்ச்சிகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

2004-இல் எனது கணவருக்கு டெல்லி டிரான்ஸ்பர் ஆனது. பெரிய பெண்ணை இரண்டாம் வகுப்பிலும், இளைய பெண்ணை நர்சரியிலும் ஒரு நல்ல பள்ளியில் சேர்த்தோம். டிசம்பர் மாதத்தில் அப்பள்ளியில் ஆண்டு விழா கொண்டாடினர். இரு பெண்களும் கலைநிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். பார்க்கச் சென்றிருந்தோம்.

பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. படிப்பு, ஆடல், பாடல், பேச்சுப்போட்டி போன்ற ஏனைய பிரிவுகளில் மிகச்சிறப்பாகத் தேர்ந்தவர்க்கு பரிசுகள் கொடுத்துக் கொண்டிருந்தனர். சின்னச் சின்னக் குழந்தைகள், கைகளைப் பின்னே கட்டிக்கொண்டு, மேடையில் ஏறி பரிசுகளை வாங்கும் காட்சியைப் பார்க்கவே



பரவசமாக இருந்தது. உடலும், உள்ளமும் நிறைந்தது போன்ற உணர்வு. மனத்தின் ஆழத்தில் இருந்து பிரார்த்தனை எழுந்தது!

'அன்னையே! எனது இரு குழந்தைகளும் இதுபோல ஒவ்வொரு வருடமும் மேடை ஏறி பரிசு வாங்க வேண்டும்! சமர்ப்பணம்!' மனம் சந்தோஷத்தால் நிறைந்து கண்கள் பனித்தன! எனது பிரார்த்தனையை முழுக்கச் சமர்ப்பணம் செய்ய முயற்சித்தேன். கணவரிடம்கூட எனது பிரார்த்தனை பற்றிச் சொல்லவில்லை.

ஒரு நாளும் எனது கணவரோ, நானோ பரிசு வாங்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு நெருக்கடி கொடுக்கவில்லை. என்ன ஆச்சரியம்! ஸ்ரீ அன்னையின் அருளால் குழந்தைகள் தாங்களாகவே நன்றாகப் படிக்க ஆரம்பித்தார்கள்! டியூஷன் போன்ற உதவிகள் ஏதும் இல்லாமல் பாடத்தில் ஆர்வத்துடன் கவனம் செலுத்தினார்கள். ஆறு வருடங்களுக்கு இரண்டு பெண்களும், ஒவ்வொரு முறையும், 'பெஸ்ட் இன் அகடமிக்ஸ்' என்று சர்ட்டிபிகேட்டும், பரிசும் வாங்கினார்கள். இது முழுக்க முழுக்க ஸ்ரீ அன்னையின் அருள் என்று நாங்கள் முழுவதும் உணர்ந்து நன்றியில் கரைந்தோம்.

அந்தப் பள்ளியில் இவ்வாறு பரிசு பெறும் மாணவ, மாணவியரின் பெற்றோருக்கு தனியாக சிறப்பு அழைப்பிதழ் அனுப்பும் பழக்கம் இருந்தது. ஒவ்வொரு முறையும் இவ்வாறு அழைப்பிதழ் கிடைக்கும் போதும், எனது கணவர் சிறு குழந்தைபோல, சந்தோஷமாகச் சிரிப்பார். நிகழ்ச்சிக்கு முதல் ஆளாக தயாராவார். அப்பாவின் சந்தோஷத்தைப் புரிந்துகொண்ட பெண்கள், இன்னும் நன்றாகப் படிக்க ஆரம்பித்தனர்.

பெரிய பெண் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும்பொழுது அவ்வருட ஆண்டு விழாவின் பிரதான நிகழ்ச்சி ஒரு நாட்டிய நாடகம். அதற்குத் தலைமை தாங்க சினிமா மற்றும் நாடகத்துறையில் பிரசித்தி பெற்ற பிரபலத்தை அழைத்திருந்தார்கள். நேரம் குறைவு காரணமாக பரிசு வழங்கும் நிகழ்ச்சியை

பாதியாகக் குறைத்து, படிப்பு சம்பந்தமாக பரிசு வாங்குவோர் அனைவருக்கும் ஆண்டு விழாவிற்கு முதல் நாளே, ஒத்திகை நிகழ்ச்சியின்போது பரிசு வழங்க முடிவு செய்தனர். அதனால் எங்களுக்குத் தனி அழைப்பிதழ் வராது. அந்த விழாவிற்கும் செல்ல முடியாது. இதை அறிந்த பெரிய பெண்ணிற்கு மிகுந்த வருத்தம். அப்பாவிற்கு நாங்கள் தரும் சந்தோஷமே இதுதானே! என்று தனது அப்பாவிடம் விஷயத்தைச் சொல்லவே தயங்கினாள். எனக்கு ஏனோ மனதில் ஒரு தடுமாற்றமும் வரவில்லை. ''ஸ்ரீ அன்னையிடம் பிரச்சனையைச் சொல். சமர்ப்பணம் செய்; அவரை முழுமையாக நம்பு'' என்றேன்.

இது அவளுக்கு ஸ்ரீ அன்னையை மிகவும் நெருங்கும் சந்தர்ப்பம் போலும். இரவு முழுவதும் ஸ்ரீ அன்னையை பிரார்த்தித்துக் கொண்டு இருந்ததாகச் சொன்னாள். அடுத்த நாள் பள்ளியிலிருந்து வந்தவள் சிறப்பு அழைப்பிதழோடு வந்தாள். படிப்பில் திறம்பட தேர்ந்தோர்க்கு முதல்நாளே பரிசு கொடுக்கும் நிகழ்ச்சியில் ஒரு மாற்றமுமில்லை. இவள் அவ்வருடத்தில் அவளது பள்ளியின் சார்பாக, பல பேச்சுப் போட்டிகளில் கலந்துகொண்டிருந்தாள். அதனால் அவளுக்கு, 'பெஸ்ட் ஸ்பீக்கர்' என்கிற அவார்ட் ஆண்டு விழாவின் போது தருவதாக அந்த அழைப்பிதழில் எழுதி இருந்தது. ' உண்மையில் இந்தப் பரிசுக்கு நான் தகுதியானவளே அல்ல!' இது முழுக்க முழுக்க ஸ்ரீ அன்னையின் அருள்! ஸ்ரீ அன்னைதான் நான் ஆண்டு விழாவில் பரிசு வாங்க வேண்டும் என்பதற்காக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை இப்பரிசுக்காக என்னைத் தேர்ந்தெடுக்க வைத்திருக்கிறார்கள்'' என்றாள் அவள்.

அன்னை அத்தோடு நின்று விடவில்லை. அவ்வருடம் பள்ளியில் நாட்டிய நாடகத்திற்கு ஒலி, ஒளி அமைப்புகள் மிகப்பிரமாதமாக ஏற்பாடு செய்திருந்தார்கள். அரங்கம் முழுவதும் இருளில் இருக்க, இரு பெரிய ஒளி வட்டங்கள்! ஒன்றில் தலைமை விருந்தினர், இன்னொன்றில் என் பெண்ணும் அவளது தோழியும்! தலைமை விருந்தினருக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்பது, அவரை விளக்கு ஏற்றி



நிகழ்ச்சியை ஆரம்பிக்க மேடைக்கு அழைத்துச் செல்வது, அவருக்கு நினைவுப் பரிசு கொடுப்பது போன்ற அனைத்தையும் இவளே செய்தாள்! இது போன்றவற்றை ஹெட்பாய், ஹெட்கேர்ள் செய்வது வழக்கம். இது வழக்கத்திற்கு மாறாக இருந்தது. இந்த சந்தோஷம் அன்னையால் மட்டுமே தர முடியும்.

2011-இல் கணவருக்கு கல்கத்தா டிரான்ஸ்பர் ஆனது. இங்கும் ஸ்ரீ அன்னையின் அருளால் ஒரு நல்ல பள்ளியில் குழந்தைகளுக்கு அட்மிஷன் கிடைத்தது. சிறு வயதிலிருந்தே பெரிய பெண்ணுக்கு மருத்துவம் படிக்க ஆர்வம் இருந்ததால், அதற்குத் தன்னை தயாராக்கிக் கொண்டிருந்தாள். **Competitive Exams** மூலமாகத்தான் மருத்துவத்திற்கான நுழைவுத்தேர்வு இருக்கும் என்பதால், **cyber olympiad, science olympiad** போன்ற எல்லா **competitive exams**-லும் பங்கு பெற்று பயிற்சி எடுத்துக் கொண்டு இருந்தாள். அப்போது **Indian Institute of Science - Bangalore** நடத்திய **KVPY Scholarship**-க்கு உரிய **competitive exam**-லும் பங்குபெற்று எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு இரண்டிலும் வெற்றி பெற்று **Scholarship**-க்குத் தகுதி பெற்றாள். **KVPY**-இல் தேர்வு பெற்று பள்ளிக்கு பெருமை தேடித் தந்ததாக ஆசிரியர்கள் மிகவும் சந்தோஷப்பட்டனர்.

2014-ஆம் வருடம் ஏப்ரல் மாதம், பள்ளியின் ஆண்டு விழா. பன்னிரெண்டாம் வகுப்பிற்குரிய தேர்வு முடிவுகள் வராத நிலையில், அவளுக்கு **KVPY**-இல் தேர்வு பெற்றதற்காக பரிசு கொடுக்கப் போவதாக பள்ளியிலிருந்து அழைப்பு வந்தது. கல்கத்தாவின் மிகப்பெரிய **Science City Auditorium**-இல் விழா! **CBSC**-இன் **Regional Director** தலைமை விருந்தினர்! நாங்கள் உள்ளே சென்றதும் ஆசிரியர்கள் **escort** செய்து எங்களை அழைத்துச் சென்றனர். **Special Guests** என்று எழுதப்பட்ட இருக்கைகளில் எங்களை அமர வைத்தனர்! மேடையின் இருபுறமும் மிகப்பெரிய **(screens)** திரைகள்! பிரின்ஸிபல் ஆண்டு விழா உரையின்போது **KVPY**ஐப் பற்றிச் சொல்கிறார். பெண்ணின் படம் பெயரோடு இரு திரைகளிலும் வருகிறது.

தலைமை விருந்தினர் 50,000 ரூபாய் மதிப்புள்ள **i-pad** பெண்ணுக்குப் பரிசாக வழங்குகிறார். என் மனமோ ''அம்மா! அம்மா! என்று அன்னையை அழைக்கிறது! அரற்றுகிறது! பரவசம்! அதே உணர்வு! 2004-இல் சமர்ப்பணம் செய்த போது ஏற்பட்ட உணர்வு!

ஒன்று மட்டும் நன்றாகப் புரிகிறது.

பக்தி, நம்பிக்கை, கடின உழைப்பு .... மற்ற அனைத்திற்கும் மேலே... மிக உயரே ...

தங்கள் அன்பு....

ஸ்ரீ அன்னையின் கருணை...!

ஸ்ரீ அன்னையின் அருள்...!

என்றும் தங்கள் ஆசிகள் வேண்டி
தங்கள் திருப்பாதங்கள் பணியும்
தங்கள் மகள்.

## ஜீவிய மணி

*பொய் அருளை விலக்கும். பொய் சொல்பவரைப் போற்றுவது அருளை விலக்கும். தான் நினைப்பது சரி என்பது அருளுக்கு எதிரி. எவரும் கேட்கவில்லை என்றால் சரி என்பதும் அதே போன்றது. பொய்யை விலக்குவதும், பொய் சொல்பவரை விலக்குவதும், தான் சரியில்லை என அறிவதும், கேட்டாலும் கேட்காவிட்டாலும் சரியாக இருக்க வேண்டும் என்பதும், மனச்சாட்சியை மீற மாட்டேன் என்பதும், கைவிட்ட தவற்றை நாடமாட்டேன் என்பதும் அருளுக்கு நாம் ஒத்துழைப்பதாகும்.*



**அன்னை இலக்கியம்**

# இறைவனுடன் அரைமணி நேரம்

இல. சுந்தரி

*முன்னுரை*

வடநாட்டு பகவான் சீடர் ஒருவர், பேணி என்ற தம்மூரில் பகவான் உத்தரவுப்படி, வெள்ளையரின் குண்டு வீச்சிற்கு அஞ்சி ஊரை விட்டுக் குடி பெயராது தம் மனைவியொடும், மகள் மீராவுடனும் பேராசிரியர் பணிபுரிந்து வாழ்ந்து வந்தார். தம் பூஜையறையில் பகவானின் திருவுருவப் படத்தை வைத்துத் தியானம் செய்வார். குழந்தை மீரா அதைக் கண்டும் அவர் வாயிலாக பகவானைப் பற்றிக் கேட்டறிந்தும் பகவான் மீது பக்தி கொண்டிருந்தாள். சதா அவர் நினைவு. ஒருநாள் அவள் கண்ட கனவே ''இறைவனுடன் அரைமணி நேரம்''. வெள்ளையர் குண்டு வீச்சில் மடிந்த குடும்பங்களில் அவர்கள் குடும்பமும் மடிந்தது. ஆனால் அவர்கள் கொண்ட பக்தி மடியவில்லை. மீராவின் கனவு பலித்ததா?

★★★

**நம் எல்லாச் சிந்தனைகளையும், எழுச்சிகளையும் உணர்ச்சி-களையும் ஆண்டவன் அனுமதிக்கவோ, மறுக்கவோ அவரிடம் எடுத்துரைக்க வேண்டும்.**

*ஸ்ரீ அரபிந்தோ*

★★★

பகவான் திருவுருவப் படத்தின் முன் நின்று கைகூப்பி, ''பிரபு நான் உங்களைக் காண வேண்டும்'' என்றேன்.

'ஆம் கண்டு கொண்டுதானேயிருக்கிறாய்' என்றார். ''இல்லை இப்படியில்லை. பௌதிக நிலையில் காண வேண்டும். அப்போதுதான் உம்மை என்னால் உணர முடியும்'' என்றேன்.

'சரி! எங்கே காண வேண்டும்? பரோடாவிலா? கல்கத்தாவிலா? அலிப்பூரிலா? புதுவையிலா?' என்றார்.

'தெரியவில்லை' என்றேன். அப்படியென்றால் அலிப்பூருக்கு வா' என்றார்.

'சரி' என்று தலையாட்டினேன். உடனே என் முன் அலிப்பூரின் பிரம்மாண்ட சிறைச்சாலை தெரிந்தது. மீசை முறுக்கிய கடும் பார்வையுடைய வெள்ளைக்காரக் காவலர்கள் துப்பாக்கி ஏந்திய வண்ணம் நின்றனர்.

நான் முன்னேற முயன்றேன். ஒரு காவலாளி என்னைத் தடுத்து நிறுத்தி 'நில்' என்று கடுமையாய்க் கூறினான். ''இல்லை நான் என் பிரபுவைக் காண வேண்டும்'' என்றேன். அதற்கு உனக்கு அனுமதி இல்லை என்றான். 'அவர்தாம் என்னை வரச் சொன்னார்' என்றேன் உறுதியாக.

'யாரவர்?' என்று உறுமினான். 'ஸ்ரீ அரபிந்தோ, என் இஷ்ட தெய்வம்' என்றேன்.

கட்டாயம் அவரை நீ காண முடியாது என்று முரட்டுத்தனமாய் என்னைப் பிடித்துத் தள்ளினான். எனக்குப் பின்னால் அப்போதுதான் வந்து கொண்டிருந்த டாக்டர் டாலி (**Dally**) (பகவானுடன் நட்பு முறையில் பேசிப் போகும் ஆங்கிலேயர்) என்னைக் கீழே விழாமல் பிடித்துக் கொண்டு, என்ன? என்று காவலரிடம் கேட்டார். அவன், 'இந்தப் பெண் ஸ்ரீ அரபிந்தோவைக் காண வேண்டுமாம்' என்றான்.

அப்படியா? என்று என்னைக் கனிவுடன் பார்த்தார். 'வா' என்று என் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றார். பின்புறம் திரும்பி காவல்காரனை ஒரு பார்வை பார்த்து, என் வெற்றியைக் கொண்டாடிய வண்ணம் சென்றேன். அங்குத் தனிச் சிறையொன்றில் நடுவில் அமர்ந்து கண்மூடி யோகத்திலிருந்த பிரபுவைப் பார்த்துக் கைகூப்பினேன். என் கண்கள் கண்ணீர் பொழிந்தன. (காதலாகிக்கசிந்து பொழியும் கண்ணீர் இது). 'பேசிவிட்டு வா' என்று கூறி டாலி சென்று விட்டார். என் கேவல் கேட்டு பிரபு என்புறம் திரும்பி கனிவுடன் பார்த்தார். நான் அன்பால் நெகிழ்ந்து போனேன்.

'பிரபு! நான் உங்களுக்குச் சாப்பாடு கொண்டு வரலாமா?' என்றேன்.

'வேண்டாம். எனக்கு இங்கேயே உணவு தருவார்கள்' என்றார்.

வேண்டாம் பிரபு. அது உமக்கு வேண்டாம். நானிருக்கிறேன் உமக்கு உணவு படைக்க. என்னை அனுமதியுங்கள்.



உன்னை இவர்கள் இங்கே கொண்டுவர அனுமதிக்க மாட்டார்கள்.

அவர்கள் யார் என்னை அனுமதிக்க? நான் வருவேன் பிரபு.

சரி. உன்னிஷ்டம். புன்னகைத்தார். பாதங்களில் தலை பதித்தேன். மெல்ல என் தலையை வருடி வழியனுப்பினார்.

(ஓ நான் யாரென்றுதானே யோசிக்கிறீர்கள். கடைசியில் சொல்கிறேன்)

வீட்டிற்கு ஓடினேன். அம்மாவிடம் நல்ல சாப்பாடு தயாரிக்க வேண்டுமென்றேன். தயாரிப்பதாய்ச் சொன்னார்கள். இல்லை-யில்லை. நானே தயாரிக்க வேண்டும் என்றேன். உனக்கென்ன தெரியும்? நீ சின்னப்பெண் என்றார்கள். பரவாயில்லை என்றேன். யாருக்குச் சாப்பாடு செய்யப் போகிறாய்? என்றார்.

என் இஷ்ட தெய்வம் ஸ்ரீ அரபிந்தோவுக்கு என்றேன். அம்மா சிரித்தாள். சொல்லிக் கொடுத்தாள். என் சின்னக் கைகளால், இறைவனை ஏந்திய பெரிய மனதோடு சமைத்தேன். கேரியர் என்னை விடப் பெரியது. தெருவெல்லாம் எடுத்துச் செல்லாது கயிற்றைக்கட்டி இழுத்துச் சென்றேன். ஒருவாறு சிறைவாயிலை அடைந்து விட்டேன். யாரும் என்னைத் தடுக்கவில்லை. வசுதேவர் கண்ணனைத் தலையில் சுமந்து நந்தகோபன் இல்லம் சென்றபோது எப்படி எல்லாம் வழிவிட்டதோ அது போல எனக்கும் சிறை வழிவிட்டது.

பகவானுக்குப் பிரியமாக என் சின்னக் கையால் பரிவாக உணவு படைத்தேன். சிறிதே உட்கொண்ட அவர் அங்குள்ளோர் அனைவருக்கும் அதைப் பகிர்ந்தளிக்கச் சொன்னார். செய்தேன்.

நீ உண்ணவில்லையா? என்றார். 'நீர் உண்டதைக் கண்டது நானுண்டது' என்றேன். சிரித்தார். பிரியமனமில்லாது, மீண்டும் தங்களை எப்படிக் காண்பேன்? என்றேன்.

நான் புதுவை சென்றதும், அங்கு எனக்கு உணவளிக்க வருவாய் என்றார்.

மனங்கொள்ளா மகிழ்வுடன் விடைபெற்றேன். மீரா! எழுந்திரு என்று அம்மா என் உறக்கம் கலைத்தாள். அதற்குள்ளாகவா விடிந்து விட்டது?

ஏதாவது படித்துவிட்டு கனவு காண்பதே உனக்குப் பழக்கமாகிவிட்டது என்றாள் அம்மா. கனவா? ஸ்ரீ அரவிந்தரை நான் தரிசித்தது, அவருக்கு நான் உணவு படைத்தது, யாவும் கனவா? இல்லையில்லை. அதுகனவன்று. நான் அக்கனவு மெய்யாகப் பிரார்த்திப்பேன். புதுவைக்கு உணவளிக்க வருவாய் என்றாரே. நான் சதா ஸ்ரீ அரவிந்தரை எண்ணினேன்.

★★★★★

தென்னகத்தில் உள்ள சிறு கிராமம் கிருஷ்ணாபுரம். பசுமை நிறைந்த இக்கிராமத்தின் நடுநாயகமாய் ஒரு கிருஷ்ணன் கோயில். இக்கோயிலில் பாரம்பரியமாய் பூஜை செய்யும் வழியில் வந்தவர் இராமன் பட்டாச்சாரியார். இவர் மகள் பூங்கோதை. இவர்களை அண்டிப் பிழைத்த சிறுவன் வரது என்ற வரதன். இராமன் மிகுந்த பக்தி சிரத்தையுடன் கோயில் பூஜா காரியங்களைச் செய்து வந்தார். கோதை நந்தவனத்தில் பூக்களும் துளசியும் பறித்து மாலை கட்டி கண்ணனுக்குச் சார்த்தக் கொடுப்பாள். சந்தனம் அரைத்து வைப்பாள். நிவேதனத்திற்குச் சர்க்கரைப்பொங்கல் தயாரிப்பாள். வரது அபிஷேகத்திற்கு நீர் கொண்டு வருவான். இது அவர்கள் பணி. கோதை பக்தி வடிவானவள். கோயிலில் நடக்கும் இசைச் சொற்பொழிவுகளைக் கேட்டுக்கேட்டு கண்ணன் மீது ஆராத அன்பு கொண்டிருந்தாள். இராமனின் மனைவி காலமாகி-விட்டதால் கோதையே நிவேதனம் தயாரிப்பாள். பதின்மூன்றே வயதான அவள் பொறுப்பும், அக்கறையுமாயிருந்தாள். இராமன் அதிகாலை எழுந்து காலை நேர பூஜைக்காக ஆற்றில் நீராடி வந்தார். நிர்மால்யம் களைந்து தீபம் ஏற்றி அபிஷேக ஆராதனை தொடங்க வேண்டும்.

அம்மா கோதே! நைவேத்யம் ரெடி பண்றயா? என்கிறார் இராமன்.

ஆமாம் அப்பா. பூவெல்லாம் பறித்து வைத்து விட்டேன். துளசி மாலையும் ரெடி. சந்தனம் அரைத்து வைத்து விட்டேன். அபிஷேகத்துக்கு வரது தீர்த்தம் கொண்டு வருவான். நீங்கள் அபிஷேகம் ஆரம்பிக்கலாம். அதற்குள் நான் சர்க்கரைப் பொங்கல் ரெடிபண்ணி எடுத்துக் கொண்டு தீபாராதனை



பார்க்க வந்து விடுவேன் என்கிறாள் கோதை. தன் பெண்ணின் பக்தியும், சிரத்தையும் பட்டாச்சாரிக்கு பெரும் பெருமை.

அவள் அகம் இந்த ஸ்ரீ கிருஷ்ணனால் நிறைந்து வழிந்தது. பக்தி செய்வதில் அவள் கோபியர்க்கு இணையானவள். அக அழகால் முக அழகு நிறைந்து ஈஸ்வர கைங்கர்யம் தவிர ஏதும் அறியாதவள். இராமனே அவளுக்குத் தந்தையும், குருவும். அவரே அவளுக்கு எண்ணும் எழுத்தும் கற்பிப்பார். மதிய நேரங்களில் ஆழ்வார் பாசுரங்களைக் கற்பிப்பார். ஆண்டாள் பாசுரங்களைக் கேட்டுக் கேட்டு அவள் ஆண்டாளே ஆனாள். தீபாராதனை முடிவில் அவள் பாடும் பாசுரம் கேட்கவே ஒரு பக்தர் குழாம் அங்குக் கூடிவிடும். அவள் தன் இனிய குரலில் பக்தியும் கலந்து,

*என்புருகியின வேல்நெடுங் கண்கள் இமைபொருந்தா பலநாளும்*
*துன்பக்கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்தோணி*
*பெறாதுஉழல் கின்றேன்.*
*அன்புடையாரைப் பிரிவுறு நோயதுநீயும் அறிதி குயிலே!*
*பொன்புரை மேனிக்கருளக் கொடியுடைப் புண்ணியனை வரக்கூவாய்.*

என்று பாடுவாள் (இப்பாடல் பகவானால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட பாடல் என்பது குறிப்பிடத்தக்கது).

'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உற்றோமே ஆவோம் உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்று பாடுவாள்.

கோதையின் பக்தியும், அவள் தயாரிக்கும் நைவேத்யமும் கண்ணன் உவந்தது என அதைப் பெற ஒரு கூட்டம் காத்திருக்கும்.

அபிஷேக ஆராதனை முடிந்தவுடன் கோதை நைவேத்யம் கொண்டு வைத்துவிட்டு, பாசுரம் பாடுகிறாள். கண்ணன் சிலை ஜீவனோடு அவள் கண்களுக்குத் தெரிகிறது.

கடந்த இரண்டு நாட்களாக அதிகாலையில் கண் விழிக்கும்முன் கண்ணனின் குழலோசை கேட்கிறது. கேட்டு விழித்துக் கொள்கிறாள். புன்னகை தவழ கண்ணன் காட்சி தருகிறான். திடீரென அவனே முதிய சந்நியாசியாய் காட்சி தருகிறான். மீண்டும், மீண்டும் இவ்வாறு காண்கிறாள். ஒன்றும் புரியவில்லை. மெய்சிலிர்த்து ஆனந்தம் பெறுகிறாள். இது என்னவாக இருக்கும்?

அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை, நிவேதனம் யாவும் முடிந்து கோதையின் இசையாராதனையும் முடிந்து, பக்தர்களுக்குப் பிரசாத விநியோகமும் முடிந்தது. கோதை கையில் பிரசாதத்துடன் கண்ணனைக் காண்கிறாள். காலையில் கண்ட அதே காட்சி. திடீரென கண்ணன் ஒரு துறவிபோல் காட்சி தருகிறான். கணப்போதுதான், காட்சி மறைகிறது.

நடை சார்த்தும் நேரம். கேசவன் சார் வேக வேகமாக வருகிறார். அவரைக் கண்ட இராமன், 'வாங்கோ, நல்ல வேளை நடை சார்த்துமுன் வந்தீர். ஏன் இத்தனை நாட்களாய் வரவேயில்லை?' என்கிறார்.

கைகூப்பி வணக்கம் தெரிவித்த கேசவன் ''நான் ஊரில் இல்லை சுவாமி. இன்றுடன் வீடும் விற்று நிரந்தரமாய் ஊரை விட்டுப் போவதால் கண்ணனைத் தரிசித்து, உங்களிடமும் சொல்லிக் கொண்டு போக வந்தேன்''. என்றார்.

ஊருக்கா? எங்கு வேலை மாற்றல்? இராமன் கேட்கிறார். வேலையுமில்லை. மாற்றலுமில்லை. நடமாடும் கண்ணனைக் காணச் சென்று விட்டேன் - கேசவன் கூறிய பதில்.

தீர்த்தம், சடாரி யாவும் பெற்றுக் கொண்ட கேசவன் 'நைவேத்யப் பிரசாதத்தை இழந்து விட்டேன்' என்றார் வருத்தமாக.

'இந்தாருங்கள் மாமா. கண்ணன் யாரையும் ஏமாற்ற மாட்டான்' என்று தன் கையில் தொன்னையில் வைத்திருந்த பிரசாதத்தை அவருக்களித்தாள் கோதை.

''உன் பங்கை எனக்குத் தந்தாயா கோதை?'' என்றார் கேசவன்.

''அவள் பக்தியைப் பகிர்ந்தளிக்க வந்தவள் அல்லவா?'' என்றார் இராமன்.

''மாமா பதிலுக்கு நீங்கள் ஒன்று சொல்ல வேண்டும்'' என்றாள் கோதை.

''கேளம்மா சொல்கிறேன்'' என்றார் கேசவன். ''நடமாடும் கண்ணன் என்றீர்களே அவர் எங்கிருக்கிறார்?''

''அவர் இங்குப் புதுச்சேரியில்தான் இருக்கிறார்''.



''புதுவை குடிக்குச் சலுகையான ஊரல்லவா? அங்கு ஏன் கண்ணன் நடமாடுகிறார்?'' என்று இராமன் கேட்கிறார்.

''புல்லாங்குழல் தரும் சுகம் தெரியாதவர் குடியை நாடுகின்றனர். நாமென்ன செய்ய'' என்கிறார் கேசவன்.

''என்ன சொல்கிறீர் கேசவன்?''

''ஆமாம் சுவாமி புதுவையில் கிருஷ்ணாவதாரத்தின் அடுத்த அவதாரமாக பகவான் ஸ்ரீ அரவிந்தர் வந்து விட்டார்''.

''மாமா! என்ன சொல்கிறீர்கள். கிருஷ்ணன் அடுத்த அவதாரமானாரா? புதுவையில் இருக்கிறாரா?'' ஆர்வம் மேலிடுகிறது கோதைக்கு.

''ஆமாம் கோதை. பரமன் (ஸ்ரீ அரவிந்தர்) மனிதனாய் வந்து பூரணயோகம் செய்து பூமிக்கு அதிமானசம் என்ற சத்திய ஜீவிய சக்தியைக் கொண்டு வரப் போகிறார். அதன் முதற்கட்டமாக நவம்பர் 24-இல் அவர் ஏற்ற பௌதிக உடலில் தெய்வீக ஆனந்தமான ஸ்ரீ கிருஷ்ணன் கலந்து விட்டார்''.

''இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றார் இராமன்.

''நீங்கள் செய்தித்தாள் பார்க்கவில்லையா? வார இதழ், மாத இதழ் யாவுமே இச்செய்தியைச் சிறப்பித்து எழுதியிருந்தது. அதன் பிறகு அவரைக் காண வேண்டும் என்ற ஆவலில்தான் புதுவை சென்றேன். அவரைத் தரிசித்த பிறகு மனம் அங்கேயே லயித்து விட்டது. அதனால்தான் அங்கேயே குடியேறிவிட்டேன்''.

''ஏன் இங்கு நம் கிருஷ்ணர் (கோயிலில்) இல்லையா?'' என்றார் இராமன்.

''இல்லையென்று சொல்லவில்லை. இவரே எழுந்து வந்தால் வேண்டாம் என்பீரோ?''

''ஐயய்யோ! அப்படிச் சொல்லவில்லை. ஏனோ எனக்கு இங்குதான் விதிக்கப்பட்டதாக உணர்கிறேன். இவருக்குக் கைங்கர்யம் பண்ணாமல் என்னால் இருக்க முடியாது'' என்றார் இராமன்.

''கண்ணனை வழிபட்டோம். அவரே நம்மிடையே வரச் சம்மதித்து வந்தால் அவரைப் பார்க்காது விட்டு விடுவோமா?'' என்கிறார் கேசவன்.

''ஆமாம் அப்பா. மாமா சொல்வது போல் கண்ணனைச் சென்று காண வேண்டாமா? எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறதப்பா'' என்று கெஞ்சுகிறாள் கோதை.

''கோவில் என்றிருந்தால் பூஜா கைங்கர்யம் செய்வது முக்கியம் அம்மா. பூஜையை விட முடியாது'' என்றார் இராமன்.

''அப்படியானால் நானாவது மாமாவுடன் போய்க் கிருஷ்ணனை தரிசித்து வருகிறேனே அப்பா. இரண்டு நாட்களாய் எனக்கு விடியற்காலையில் கண்ணன் குழலூதி என்னை எழுப்புவது போல் கனவு வருகிறதப்பா. அது ஒருவேளை இவர் சொன்ன மாதிரி நான் பூமியில் மீண்டும் வந்து விட்டேன் என்று சொல்வதாயிருக்குமோ?'' என்கிறாள் கோதை.

''நீ போய்விட்டால் இங்கு பூஜைக்கு யார் பூக்கொண்டு வருவார்? நைவேத்யம் யார் தயாரிப்பார்?'' என்கிறார் இராமன்.

''மாமா கோதை போய் தரிசனம் செய்து வரட்டும் மாமா. அதுவரை நானே எல்லாம் செய்கிறேன் மாமா'' என்கிறான் வரது. அவனுக்குக் கோதை மீது மிகுந்த அன்பு. அவள் ஆசை நிறைவேற வேண்டும் என்று ஆசைப்படுகிறான். கோதை அவனை நன்றியுடன் பார்க்கிறாள்.

''குழந்தையை என்னுடன் அனுப்புங்கள் மாமா. நான் அவளுக்குத் தரிசனம் செய்வித்து கொண்டு வந்து விடுகிறேன். தெய்வ தரிசனத்திற்குத் துணை செய்வது புண்ணியமல்லவா!'' என்கிறார் கேசவன்.

இராமனுக்கு அவளைப் பிரிய மனமில்லை என்றாலும் செல்லமாய் வளர்த்த பெண். பக்தி பூர்வமானவள். இதுவரை அவள் விருப்பம் என்று எதுவும் கேட்டதில்லை. அவள் சந்தோஷத்திற்காக அவளை அனுப்பி வைக்க ஒப்புக் கொண்டார்.

கோதை பரம சந்தோஷத்துடன் இரண்டு பாவாடை சட்டைகளைப் பையில் எடுத்துக் கொண்டு கேசவன் சார் கையைப் பிடித்துக் கொண்டு கிளம்பி விட்டாள். இதுவரை அவளைப் பிரிந்தறியாத இராமன் பாசத்தால் கண்கலங்கி விடை கொடுத்ததுடன் விரைவில் அவளைக் கொண்டுவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



''ஆகட்டும் சுவாமி, கவலைப்படாதீர். தரிசனம் ஆனவுடன் கொண்டு வந்து விட்டு விடுகிறேன். குழந்தை கண்ணன் மீது எவ்வளவு பக்தி வைத்திருக்கிறாள். அவள் கட்டாயம் அந்தப் பிரபுவை தரிசிக்க வேண்டும்'' என்று கூறி புறப்பட்டு விட்டார்.

இரண்டு நாட்களாய் விடியற்காலையில் கண்ணன் அவள் கனவில் வருகிறான். குழலூதி அவளை எழுப்புகிறான். அவள் விழித்துப் பார்க்கும் போது புன்னகை செய்கிறான். திடீரென முதிய துறவியாய் மாறுகிறான். புதுவை வந்து தரிசன வரிசைக்கும் வந்து விட்டாள். கேசவன் மாமாவுக்குப் பின் வரிசையில் நிற்கும் சிறுமி அவள். அவளுக்கு முன்னே வரிசையில் நிற்கும் பெரியவர்கள் அவள் கண்ணனைப் பார்க்க முடியாதவாறு மறைக்கிறார்கள். இரண்டு பக்கமும் தலையை வெளியே நீட்டிப் பார்க்கிறாள். ஸ்ரீ அன்னை அவளுக்குக் குழலூதும் கண்ணனாகவே காட்சியளிக்கிறார். பக்கத்தில் துறவி போன்ற பெரியவர். அவள் கனவில் கண்ணன் மாறிய அதே வடிவம். இதற்கு என்ன பொருள். சிறுமியவள். பொருள் புரியவில்லை. தன் முறை வந்த போது அவள் பகவானை ஸ்ரீ கிருஷ்ணராகவே காண்கிறாள். பிறகு துறவியாய் மாறிய ஸ்ரீ அரவிந்தராய்க் காண்கிறாள். பக்திப் பெருக்கில் கண்ணீர் கண்ணை மறைக்க வரிசை நகர்ந்து அவளை நகர்த்திவிட்டது.

''கோதை! கண்ணனைத் தரிசித்தாயா? முதலில் இருந்தவர் ஸ்ரீ அன்னையாகிய பராசக்தி, அடுத்து இருந்தவர்தாம் ஸ்ரீ அரவிந்தராய் அவதரித்த உன் கண்ணன்'' என்றார்.

''மாமா! நான் மறுபடியும் அவர்களைக் காண முடியுமா?'' என்கிறாள்.

''தரிசனம் முடிந்து எல்லோரும் போய் விட்டார்கள் இனிமேல் நாம் இங்கிருக்க முடியாது. வா போகலாம்'' என்கிறார் கேசவன்.

''இல்லை மாமா. நான் மீண்டும் என் பிரபுவைத் தரிசிக்க வேண்டும் போலிருக்கிறது,'' என்கிறாள் குழந்தை.

இன்னொரு மிட்டாய் வேண்டும் என்பது போலல்லவா கேட்கிறாள்? இது அப்படிப்பட்டதா? சாத்தியமா? எப்படிப் புரியவைப்பது? ''அம்மா கோதே! நாம் இன்னொரு நாள் தரிசனத்திற்கு வருவோம். இன்று முடிந்துவிட்டது.''

''இல்லை மாமா. நான் மீண்டும் என் கண்ணனைத் தரிசிக்க வேண்டும் மாமா'' என்று கெஞ்சிக் கேட்கிறாள்.

அவளை எப்படிச் சமாதானம் செய்து அழைத்துப் போவது என்று தவிக்கும் போது ஒரு சாதகர் அவர்களை நோக்கி வருகிறார்.

''இங்குக் கோதை என்பவர் யார்?'' என்கிறார். சிறுமி உற்சாகமாக ''நான்தான் கோதை'' என்கிறாள். கேசவனுக்கோ எதற்காக இருக்கும் என்ற பதற்றம்.

''வாம்மா. உன்னை அன்னை அழைத்து வரச் சொன்னார்'' என்கிறார்.

''அன்னையா!'' ஒருபுறம் கேசவனுக்கு மகிழ்ச்சி, மறுபுறம் அதிர்ச்சி. என்னவாக இருக்கும்.

கேசவன் கையை விட்டுவிட்டு, சாதகர் கையைப் பற்றிக் கொண்டாள் கோதை. சாதகர் அவளை அன்னையிடம் அழைத்துச் செல்ல ஸ்ரீ அன்னை அவளுக்குக் கிருஷ்ணராகக் காட்சி தருகிறார். ஓடிப்போய் மனம் கொள்ளா மகிழ்வுடன் அவர் பாதங்களைப் பற்றுகிறாள். அன்னையும் அவளைத் தூக்கி நிறுத்தி, ''நீ என்னுடன் இங்கேயே இருந்து விடுகிறாயா?'' என்கிறார்.

''ஆம் கிருஷ்ணா. நான் இங்கேயே உன்னுடன் இருக்கிறேன்'' என்று வேகவேகமாய்ச் சொல்கிறாள். அவள் ஆர்வம் கண்டு அன்னை புன்னகை செய்கிறார். ''நீ எனக்கு என்ன தருவாய்?'' என்கிறார் அன்னை.

''அங்குக் கோவிலில் உனக்குத் தினமும் சர்க்கரைப் பொங்கல் நைவேத்யம் செய்து தருவேனே அதே போல் செய்து தருகிறேன். ஆனால் நீ அதைச் சாப்பிட்டு நான் பார்க்கவில்லை. அப்பாவிடம் கேட்டேன் ஏன் கண்ணன் நம் நைவேத்யத்தைச் சாப்பிடவில்லை என்று. அதற்கு அப்பா, நீ சாப்பிடுவது நம் கண்ணுக்குத் தெரியாது. அதற்கு நிறைய பக்தி வேணும் என்பார்.''

''இப்போது உன் கண்ணன் சாப்பிடுவதை நீயே பார்க்கப் போகிறாய்'' என்கிறார் அன்னை.

''அப்படியென்றால் இப்போதே செய்யட்டுமா?'' என்று ஆவலுடன் கேட்கிறாள்.



''இன்று கண்ணன் சாப்பிட்டு விட்டார். நாளை நீ தருவதைச் சாப்பிடுவார்'' என்றார் அன்னை.

அத்துடன் சாதகரை அழைத்து, ''நாளை இவள் உணவு சமைக்க அவள் கேட்பதெல்லாம் கொடு. இவளை அழைத்து வந்தவரிடம் இவள் இங்கேயே இருப்பாள் என்று சொல்லிவிடு'' என்று உத்தரவிட்டார் அன்னை.

சாதகர் கேசவனிடம் வந்து, ''குழந்தையை அன்னை இங்கேயே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார். நீங்கள் நிம்மதியாகப் புறப்படுங்கள்'' என்றார்.

''ஐயய்யோ, என்ன சொல்கிறீர்?'' என்று துடித்துவிட்டார் கேசவன். ''ஐயா, தயவு செய்து அந்தக் குழந்தையை என்னிடம் கொடுங்கள். அவள் என் மகளாக மட்டுமிருந்தால் மிகுந்த மகிழ்வுடன் விட்டுவிட்டுப் போயிருப்பேன். பக்கத்தில் கிருஷ்ணாபுரம் கண்ணன் கோயில் பட்டாச்சாரியார் மகள் அந்தக் குழந்தை. பகவானைத் தரிசிக்க மிகவும் ஆசைப்பட்டதால் தெரிந்தவர் வீட்டுக் குழந்தை என்று அழைத்து வந்தேன். உடனே கொண்டு விட வேண்டும் என்று சொல்லி அனுப்பினார். குழந்தை எங்கே என்றால் என்ன பதில் சொல்வேன்'' என்று அழாக் குறையாகப் பதறினார் கேசவன்.

சாதகர் அதையும் போய் அன்னையிடம் கூறினார்.

'அவனை இங்கே அழைத்து வா' என்றார். 'ஐயா! அன்னை உங்களை அழைக்கிறார்'. இத்தனை நெருக்கடியிலும் அன்னையைத் தரிசிக்கப் போகிறோம் என்பது மகிழ்ச்சியாகத்-தானிருந்தது. இந்த வாய்ப்பிற்குக் கோதைக்கு மானசீகமாய் நன்றி சொல்ல மறக்கவில்லை.

அன்னையைக் கண்டதும் கீழே விழுந்து நமஸ்கரித்து எழுந்து பணிவுடன் நிற்கிறார்.

''அவள் இங்கே இருக்கட்டும். நீ போகலாம்'' என்றார்.

கேசவன் என்ன சொல்வதென்று தெரியாமல் மனத் தவிப்போடு அன்னையைப் பார்க்கிறார்.

''எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன். நீ போகலாம்'' என்று ரத்தினச் சுருக்கத்துடன் கூறினார்.

வேறு வழியின்றி செய்வதறியாது, அரை மனத்துடன் செல்கிறார் கேசவன். அவர் வீட்டிற்குள் நுழைந்தவுடன் வானம் பொத்துக்கொண்டது போல் மழை கொட்டியது. ஒரே இரவில் ஊரில் வெள்ளம் புரண்டது. புதுவையுடன் எல்லாப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டன. சரியாகச் சில நாட்கள் ஆகலாம். கேசவன் தற்காலிகமாகப் பிரச்சனையிலிருந்து (கோதையைக் கொண்டுவிடும் பொறுப்பிலிருந்து) விடுபட்டதாக உணர்ந்தார்.

இராமன் பட்டாச்சாரியார் செய்தித்தாள் மூலம் வெள்ளம் பற்றி அறிந்து விரைவில் வெள்ளம் வடிந்து குழந்தை வர வேண்டும் எனப் பிரார்த்தித்த வண்ணமிருந்தார்.

அன்னை கூறியது போல் கோதை சர்க்கரைப்பொங்கல் தயாரிக்க அவள் கேட்ட பொருட்களைச் சாதகர் தருகிறார். இந்தச் சின்னப் பெண் என்ன செய்யப் போகிறாள் என்று சாதகர்கள் ஆர்வத்துடன் கவனிக்கிறார்கள். அவள் மிகுந்த ஆர்வத்துடன் தன் சின்னஞ்சிறு கைகளால் பானையை அடுப்பிலேற்றி படிப்படியாய்ச் செயல்பட்டு பொங்கலைக் கிளறுகிறாள். முந்திரியும், திராட்சையும் நெய்யில் வறுத்து அதில் இடுகிறாள். ஏலப்பொடி தூவி மணக்க மணக்க பொங்கல் செய்து சின்னக் கைகளால் பிடிதுணியால் அடுப்பினின்றும் இறக்கி வைத்து கண்ணனை நினைக்கிறாள்.

பகவானின் உணவு நேரம். அன்பர் பலர் தயாரித்த உணவுப் பொருள்கள் தனித்தனிப் பாத்திரங்களில் நிவேதனமாக அனுப்பப்-படுகிறது. அதில் கோதை தயாரித்த சர்க்கரைப் பொங்கலும் பாத்திரத்தில் இட்டு அனுப்பப்படுகிறது. மிகுந்த பக்தியுடன் அனுப்பி வைத்துவிட்டு தன் கண்ணன் அதைச் சுவைப்பதை எண்ணி மகிழ்ந்த வண்ணம் காத்திருக்கிறாள் கோதை.

பகவான் தன் முன்னுள்ள காணிக்கைகளில் தம் அருட்-பார்வையைச் செலுத்துவார். அவை அவரவர்க்குத் திருப்பி அனுப்பப்படும். அன்னை அவருக்காக அனுப்பும் பதார்த்தங்-களையே அவர் உண்பார். அன்னையே பல நேரம் பார்த்துப் பார்த்துப் பரிமாறுவார். இன்றைக்கு மிகுந்த ஆவலுடன் அனைவரும் காத்திருக்க பகவான் கோதையை அழைத்து வரச்



சொல்கிறார். குறிப்பாக அவர் அவள் சர்க்கரைப் பொங்கல் உள்ள பாத்திரத்தைக் கையில் எடுக்கிறார். முகம் மலர்ந்து புன்னகை செய்கிறார். எப்போதும் அவர் முகத்தில் தீவிரத்தையே பார்த்-திருந்த சாதகர்கள் அவர் புன்னகையை இரசித்து மகிழ்ந்தனர்.

எல்லோரும் அந்தப் பாத்திரத்தைத் திறந்தவுடன் நெய் மணம் நுகர, பகவானோ ‘பக்தியின் சுவையும், மணமும் இணையற்றதல்லவா’ என்கிறார்.

கோதை அழைத்து வரப்படுகிறாள். பகவான் அவளுக்குப் புல்லாங்குழலுடன் ஸ்ரீ கிருஷ்ணனாக காட்சி தருகிறார். அவள் வியந்து நிற்கும் போது ஸ்ரீ அரவிந்தராய்க் காட்சி தருகிறார். அவளுக்குத் தன் கனவுக் காட்சி நினைவிற்கு வருகிறது. இவரே தம்மைத் தனக்குக் காட்டியுள்ளார். கிருஷ்ணாவதாரம் ஸ்ரீ அரவிந்த அவதாரமாய் வந்துள்ளது என்று கேசவன் மாமா கூறியதும் நினைவு வருகிறது. தன்னையிழந்து பரவசப்பட்டு நிற்கிறாள் குழந்தை. பகவான் அவள் கண்முன் அந்தச் சர்க்கரைப் பொங்கலை எடுத்து உண்கிறார். அத்தனை பேருக்கும் கண் கொள்ளாக் காட்சியானது. அவளை அழைத்துக் கனிவுடன் பிரசாத பாத்திரத்தை அவளிடமே அளித்து விட்டு உள்ளே சென்று விட்டார்.

அனைவரும் அவளைச் சூழ்ந்து கொண்டு பகவத் பிரசாதம் பெறுகின்றனர். பாத்திரம் காலியானது. ஒரு முதியவர் ‘நீ உனக்குச் சிறிதும் வைத்துக் கொள்ளவில்லையே’ என்கிறார். மனம் நிறைந்து சிரிக்கிறாள்.

ஒரு சாதகர் பகவானிடம் வந்து தயங்கியபடியே நிற்கிறார்.

‘கோதையின் நிவேதனத்தை மட்டும் ஏன் உண்டேன் என்பதுதானே உன் கேள்வி?’ என்கிறார் பகவான்.

சாதகர் தலையசைக்கிறார்.

‘அவள் தனக்கென மீதம் வைத்துக் கொள்ளவில்லை பார்த்தாயா? நானுண்டதே அவளுண்டது. பக்தியை பகிர்ந்தளிக்க வந்தவள் அவள்’, என்கிறார் பகவான். ‘நான் அவளுக்கு முன்பளித்த வாக்குப்படி அவள் சமைத்ததை உண்டேன்’ என்றார்.

அன்னை அவளுக்குத் தன்னை தாயாகக் காட்டியருளினார். அவள் தன் கண்ணனுக்கு நைவேத்யம் கொடுத்து அவர் உண்பதைக் காண அன்னையே ஏற்பாடு செய்தார் என்பதையும் குழந்தை அறிந்து கொண்டாள்.

சிறிது சிறிதாக அவள் அன்னையைப் பற்றியும் பகவானைப் பற்றியும் அங்குள்ளோர் கூறக் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள்.

வெள்ளம் வடிந்து, போக்குவரத்து சீரானது. ஒவ்வொரு நாளும் கோதையின் வரவிற்காகக் காத்திருந்த இராமன் ஒருநாள் பூஜைக்கு வரதுவை ஏற்பாடு செய்து விட்டுக் கேசவனைத் தேடி வந்துவிட்டார்.

''வாங்கோ சுவாமி'' என்று கனிவுடன் அவரை வரவேற்று உபசரித்தபின், பிரச்சனையை எப்படிச் சமாளிப்பது என்ற எண்ணம் தோன்றியவுடன் 'அன்னையே' என்று மனதில் நினைத்தார். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அன்னை கூறிய அந்தச் சொல்லை, சூழலை நினைவு கொள்கிறார் கேசவன். இராமனே பேசுகிறார். ''வெள்ளம் காரணமாய் குழந்தையை உடனே கொண்டுவிட முடியாமற் போயிருக்கும் என்று யூகித்தேன். பரவாயில்லை, இத்தனை நாட்கள் குழந்தையைப் பார்த்துக் கொண்டீர்களே. நான் ரொம்பவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கே கோதை? அங்கு ஒரு நாள் பூஜைக்கு வரதுவை ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன். உடனே புறப்பட வேண்டும். தவறாக எண்ண வேண்டாம்''.

''அவள் பகவானைத் தரிசிக்கப் போயிருக்கிறாள்'' என்று வாயில் வந்த வார்த்தையைக் கூறிவிட்டார்.

''அப்படியா? சரி, சரி, நாமும் அங்கேயே போய் அவளை அழைத்துக் கொண்டு நான் புறப்பட வேண்டும்'' என்றார் இராமன். தம் மகளைக் காண அவர் ஆர்வப்படுவது அவர் பேச்சில் தெரிகிறது. என்ன செய்வது என்று புரியாத நிலையில் 'எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன்' என்ற அன்னையின் வார்த்தையை மீண்டும் நினைவில் பதித்து ஒன்றும் பேசாது அவருடன் ஆஸ்ரமம் வந்தார்.



அங்கு முன்பு கோதையை அன்னையிடம் அழைத்துச் சென்ற அதே சாதகர் வெளியே வர, அவரிடம் ''கோதையின் தகப்பனார் இவர். அவளை அழைத்துப் போக வந்திருக்கிறார்'' என்றார் கேசவன்.

சாதகர் செய்தியை அன்னைக்குச் சொல்ல, அன்னை அவரைத் தம்மிடம் அழைத்து வரச் சொல்கிறார்.

அன்னை அவருக்கு மகாலட்சுமியாய்க் காட்சி தருகிறார். அவரைக் கீழே விழுந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து எழுந்து கை கூப்பித் தொழுது மந்திரங்களை உச்சரித்து விடுகிறார்.

அன்னை புன்னகை செய்கிறார். ''என் மகள் கோதையை அழைத்துச் செல்ல வந்தேன்'' என்கிறார் இராமன்.

''அவள் இங்கே இருக்கட்டும்'' என்றார் அன்னை. ''அங்குக் கோயிலில் கிருஷ்ணனுக்கு அவள் கைங்கர்யம் தேவைப்படுகிறது'' என்று மிகவும் நயந்து கூறினார்.

''அதை நீயே பார்த்துக் கொள்'' என்றார். ''என் குழந்தையை பிரிந்து நான் இத்தனை நாட்கள் இருந்ததில்லை. அவளை என்னுடன் தயவு செய்து அனுப்பி வையுங்கள்'' என்று அழாக் குறையாகக் கெஞ்சினார்.

''உன் குழந்தையா?'' என்று அவரை அன்னை உற்றுப் பார்க்க, அவள் தன் சுவீகாரக்குழந்தை என்பதைக் கேசவன் கூறியிருப்பாரோ என்று இராமன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே, கேசவன் சொல்லாமலே எனக்கு அது தெரியும் என்று சிரித்தார் அன்னை. இராமனுக்கு அதிர்ச்சியாயிருந்தது. அவர் சொல்லாமல் எப்படித் தெரியும் என்று நினைத்துக் கொண்டிருக்கும்போது, ''கேசவனுக்குத் தெரியாத உண்மையும் எனக்குத் தெரியும்'' என்று அன்னை கூற, இராமனுக்கு வியர்த்தது.

''கேசவனோ அது என்ன உண்மையாக இருக்கும் என்று நினைக்கிறார்''.

''நிஜமாகவே இவருக்கு உண்மை தெரியுமா? என் குழந்தையைப் பறித்துக் கொள்ள என்னை பயமுறுத்துகிறாரா'' என்று இராமன் எண்ணுகிறார்.

''நீ கோவிந்தபுரம் சென்ற போது அநாதையாய்க் கிடந்த குழந்தையை எடுத்து வந்து, காலஞ்சென்ற உறவினர் குழந்தை

என்று கூறி அவளைச் சுவீகரித்துக் கொள்ளவில்லையா?'' என்கிறார் அன்னை குறும்பாக அவரை நோக்கி.

மீண்டும் இராமன் அன்னையை நமஸ்கரிக்கிறார். ''தாயே என்னை மன்னித்து விடுங்கள். குழந்தை பாசத்தால் தவறு செய்துவிட்டேன்'' என்கிறார்.

''இல்லை. நீ தவறேதும் செய்யவில்லை அவளை வளர்க்கும் பாக்கியத்தை நானே உனக்குக் கொடுத்தேன். உன் பொறுப்பு முடிந்து விட்டது. இனி அவள் இங்கு தன் இஷ்ட தெய்வத்-தோடிருக்க வரம் பெற்றவள். அவள் மீது வைத்த பாசத்தை இறைவனிடம் பக்தியாய் மாற்றி உன் கடமையை அர்ப்பணமாகச் செய்'' என்றார் அன்னை.

பொறி தட்டியது போல் ஏதோ ஓருணர்வு. கோதை மீது கொண்ட பாசக் கயிறு அறுபட்டது.

கோதையை அழைத்து வரச் சொன்னார் அன்னை. 'அப்பா!' என்று ஓடி வந்தாள் சிறுமி.

''கோதே! உன் இஷ்ட தெய்வத்தைக் கண்டாயா? நைவேத்யம் படைத்தாயா?'' என்று அன்புடன் விசாரிக்கிறார்.

''ஆமாம் அப்பா! அவர் நான் செய்த சர்க்கரைப் பொங்கலைச் சாப்பிட்டதை பார்த்தேனப்பா'' என்று பரவசப்பட்டு, ''நான் இங்கேயே இருந்து கண்ணனுக்குத் தொண்டு செய்யட்டுமா அப்பா'' என்று கேட்கிறாள்.

''ஆமாம் கோதை. இரு. உன் இஷ்டம் போல் கண்ணனுக்குக் கைங்கர்யம் செய். உன்னை மகளாய்ப் பெற்ற பெருமையோடு அங்கு நம் கண்ணனுக்கு நானும் கைங்கர்யம் செய்கிறேன்'' என்று விடை பெற்றார்.

''எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன்'' என்ற அன்னையின் சொல் எத்தனை சத்தியமானது என எண்ணிக் கேசவன் சிலிர்க்கிறார்.

(முற்றும்)

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# நாணயம் (Honour)

பணத்தில் நேர்மை நாணயம் எனப்படும். நாணயம் என்பது காசு, பொற்காசு. எவர் கையிலிருந்தாலும் காசுக்கு மதிப்புண்டு. பொன் தன் விலையை இழப்பதில்லை. அதனால் நேர்மை என்பதை நாணயம் என்றார்களா? வேறு காரணமுண்டு. விஸ்வாசம், கற்பு, பற்று, பாசம், பொறுப்பு ஆகியவை நாணயம் போன்ற அம்சங்கள். 12 வயது குழந்தை swimming pool-இல் கண்டெடுத்த வைர மோதிரத்தை மானேஜரிடம் கொடுப்பது நாணயமான செயல். அக்குழந்தையைப் பற்றியும், அதன் குடும்பத்தைப் பற்றியும், அதன் நாட்டைப்பற்றியும் அச்செயல் சொல்வது பெரிய விஷயம். ஒரு ஆங்கிலேயன் ஸ்பெயினுக்கு ஒருவரை சந்திக்கப் போனபொழுது கப்பலில் ஏற்பட்ட தகராறு அவனை ஜெயிலில் அடைத்தது. நண்பரைச் சந்திக்க வேண்டிய தினம் அவன் ஜெயில் அதிகாரியிடம் ‘‘நான் போய் நண்பரைச் சந்தித்து விட்டு வருகிறேன்’’ என்றான்.

அதிகாரி அனுமதித்தார்.
எந்த போலீஸுமில்லாமல் அவர் போனார்.
நண்பரைச் சந்தித்தார். சொல்லியபடி திரும்பினார்.
இது எந்தக் காலத்தில் நடந்தாலும், எந்த நாட்டில்
நடந்தாலும் மனித சுபாவத்தின் நேர்மையை அவர்
நாணயத்தின் மூலம் காட்டுகிறது.

# மனம் ஆழ்ந்து விரும்புவது கொடுமை

பிரெஞ்சுப் புரட்சி, ரஷ்யப் புரட்சி, இந்திய சுதந்திரம் ஆகியவை கொடுமையை எதிர்த்து வெற்றி பெற்ற புரட்சிகள். கொடுமை கொடுமைப்படுத்தப்பட்டவருக்கு அழிந்தது. ஆனால் கொடுமை அழியவில்லை. இடம் மாறியது. மாமியார் கொடுமை மருமகள் கொடுமையானது போல், கொடுமை இடம் மாறுவது.

கொடுமை அழிவது, சமூகப் புரட்சி
கொடுமை திருவுருமாறுவது, ஆன்மிகப் புரட்சி

### திருவுருமாற்றம்

மருமகள் கொடுமையைச் சமர்ப்பணத்தால் திருவுருமாற்றலாம். அவள் சாந்த சொரூபியாவாள். மாமியார் தன் மனத்திலுள்ள கொடுமையைத் திருவுருமாற்றம் செய்வது அடுத்த யோகக்கட்டம். முடியாது என்பதில்லை. சிரமம் அதிகம். கொடுமையின் உறைவிடமான சிறுமையின் வேகம் செயல்படும் அகந்தை தானே உவந்து முன்வந்து தன்னையழித்துக் கொள்ள வேண்டும். இதுவரை உலகிலும், புவியிலும், பிரபஞ்சத்திலும் நடக்காதது. நடக்க முடியாததில்லை.